

சிவசங்கரி
ஓவர் டோஸ்
31.12.2016
(7.05P.M)

மின்நூல் ஆக்கம்: தமிழ் நேசன்

மின்நூல் கூடம்

2017

# ஓவர் டோஸ்

## 1

"நிர்மலா..."

"வந்துட்டேங்க..."

"ரெடியா?"

"இதோ ஒரு நிமிஷம்..."

சில நிமிஷங்களில் கதவைத் திறந்துகொண்டு எதிரில் வந்து நின்றவளை ஏறிட்ட மனோகர், முகம் சுளித்தான்.

"வாட்ஸ் திஸ், நிம்மி!"

"என்னங்க?"

"நாம பார்ட்டிக்குப் போறமா, இல்ல கிராமத்துல ஏதாவது கல்யாணத்துக்கா? ம்?"

எதுவும் புரியாமல் நிர்மலா விழிக்க, அவன் அவளைத் தலையிலிருந்து இன்னொருமுறை ஊன்றிப் பார்த்தான்.

பட்டுப்புடவை.

அழுத்தமாய் வாரி பின்னப்பட்ட பின்னல்.

செண்டாய் பூ.

புடவையின் நிறத்துக்கு மேட்சாய் சிவப்புக்கல் அட்டிகை, வளையல், தோடு.

பெரிசாய் பொட்டு.

கண் நிறைய மை.,

“என்னங்க...? ஏன், இந்த ட்ரெஸ் உங்களுக்குப் பிடிக்கலையா? இதுல நா நல்லா இல்லியா?”

“பிடிச்சிருக்கு... நீ அழகாகவும் இருக்கே! ஆனா, நாம போகப்போற எடத்துக்குத்தான் இது ஸூட் ஆகாது...”

“ஏன்? நல்லா மேட்சிங் பார்த்துதானே உடுத்தி யிருக்கேன்?”

“அதெல்லாம் சரிதான்... பட், பார்ட்டிக்குப் போற ட்ரஸ்ஸா இது, நிம்மி?”

“...............”

கிட்டே வந்து மனோகர் அவளை அணைத்தான்.

“இந்தப் புடவை வேணாம், நிம்மா போன வாரம் வாங்கிக்கொடுத்தேனே மைசூர் ஷிபான், போய் அத உடுத்திக்கிட்டு வா... ப்ளவுஸ் அயர்ன் பண்ணியிருக்கு இல்லே? இல்லாட்டி கொண்டுவா, ஒரு நிமிஷத்துல நா இஸ்திரி பண்ணித் தரேன்... அப்புறம், நேத்து ஷாம்பூ வாங்கிக் கொடுத்து, இன்னிக்கு அதப்போட்டு குளினு சொன்னேனே... வழக்கம்போல எண்ணெய் தேய்ச்சுக் குளியல்தானா? மறந்திட்டியா?”

“இல்லீங்க... நீங்க காலைல ஆபீஸுக்குப் போனதும் ஷாம்பு போட்டுத்தான் குளிச்சேன்... முகர்ந்து வேணா பாருங்க...”

மனோகர் குனிந்தவளை முகர்ந்தான்.

“முடி காஞ்சப்புறம் எண்ணெய் தடவிக்கிட்டியா?”

“ஆமா.. ஏகத்துக்கு வைக்கலாட்டம் பறந்துச்சு... சாயங்காலம் வெளிலே போகணுமேனு தடவிக்கிட்டேன்.”

மனோகர் ஆயாசத்துடன் நாற்காலியில் உட்கார்ந்தான்.

“ப்ஷூ! பி.ஏ. டிகிரி படிச்ச பொண்ணா இருந்தும், நீ ஏன்தான் இத்தனை கட்டுப்பெட்டித்தனமாக இருக்கியோ, நிம்மா! ஷாம்பு போடறது எதுக்கு? புசுபுசுனு முடி ஒட்டிக்காம, ஜில்லுனு பறந்துகிட்டு இருக்கணும்னுதானே!

உடனே எண்ணெய் தடவி, ஷாம்பு போட்டுகிட்டதையே வீணாக்கிட்டியே...”

கணவரை ஏமாற்றத்துக்குள்ளாக்கிவிட்டது வருத்தத்தைத் தர, நிர்மலா கிட்டத்தில் வந்து, அவன் கையைப் பற்றி, “ஸாரிங்க.. அடுத்த தடவை சரியா செஞ்சிடறேன்...” என்றாள்.

மறுப்பு எதுவும் பேசாமல் அவள் உடனே சரணாகதி அடைந்துவிட்டது சின்னதாக சந்தோஷத்தைத் தர, மனோகர் அவள் தோளைத் தட்டிக்கொடுத்து புன்னகைத்தான்.

“போனாப்போவுது, டோன்ட் ஃபீல் பாட்! நீ இப்ப என்ன பண்றே.. உள்ளே ஓட்டமா ஓடி இந்தப் புடவையை அவிழ்த்திட்டு, அந்த ஷிஃபானைக் கட்டிக்கறே! சிவப்புக்கல் செட் வேணாம்... ஸிம்பிளா முத்து போட்டுக்கோ.. அப்புறம், தலைப்பின்னலைத் தளர பின்னிகிட்டு, நிறைய சென்ட் தெளிச்சி, திட்டமா லிப்ஸ்டிக் பூசிக்கிட்டு வா.. ஜல்தி... பதினஞ்சி நிமிஷம் டைம் தரேன், அதுக்குள்ளே தயாரா யிடணும்... ஓ, கே.. டார்லிங்?”

அவன் விருப்பப்படி அலங்கரித்து வந்தவளின் உதட்டுச் சாயம் அழிந்துவிடாதபடி கவனத்துடன் முத்தமிட்டவன், தலையில் வைத்திருந்த பூவை எடுத்து எறிந்தான்.

“இந்தமாதிரி பட்டிக்காட்டுத்தனமா பூ வெக்காதே, நிம்மா! தோட்டத்து ரோஜால ஒண்ணு பறிச்சி, ஸ்டைலா ஒரு பக்கமா வை...” என்றவன், தானே தோட்டத்தில் இறங்கி ஒரு வெள்ளை ரோஜாவைப் பறித்து அவள் கூந்தலில் வைத்து, “ம்ம்... நெள யு லுக் ப்ரட்டி” என்று அவள் அழகை ரசித்தான்.

காரில் ஏறிக்கொண்டு பார்ட்டிக்குச் செல்கையில், அன்று யார் வீட்டு விருந்துக்குச் செல்கிறோம் என்ற விவரங் களைக் கூறினான்.

“மிஸ்டர் பூபாலனை நீ பார்த்திருக்கே... நம்ம ரிஸப்ஷ னுக்கு வந்திருந்தார். உயரமா, கிருதாமீசை, வெச்சிகிட்டு கணீர்னு பேசுவார்! ஹோசூர்லே ஒரு தொழிற்சாலை வச்சி ருக்கார். ரொம்ப மாடர்ன்.. நல்லவரு... இன்னிக்கு நமக்காக

இந்த விருந்துக்கு ஏற்பாடு செஞ்சிருக்கறது... வெரி நைஸ் ஆஃப் ஹிம், இல்லே? என்னோட பத்து, பன்னிரெண்டு க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸ் இன்னிக்கு வருவாங்க... இவங்கள்ல சில பேரை போன வாரம் ஆனந்த் கொடுத்த பார்ட்டிலே நீ சந்திச்சிருக்கே... அதனால தயக்கமோ, பயமோ இல்லாம எல்லார்கிட்டயும் பேசிப் பழகணும், நிம்மா... இது ரொம்ப முக்கியம்! போன பார்ட்டிலே நீ அத்தனை சகஜமா இல்லாதது எனக்கு எப்படியோ இருந்திச்சி... 'என்னடா, உன் மனைவி ரெண்டு வார்த்தை பேசக்கூட வெட்கப்படறாங்க'னு என் சினேகிதங்க என்னை டீஸ் பண்ணப்போ, 'புதுசுதா னேடா... போகப்போக சரியாயிடுவா'னு சொல்லி இருக்கேன்... மிஸஸ் ராஜகுமார், மிஸஸ் பிரசன்னா மாதிரி நீயும் எல்லார்கிட்டயும் நல்லா பழகி, பிரமாத பேர் வாங்க ணும்! திஸ் ஈஸ் வெரி இம்பார்ட்ண்ட் டு மீ... அவங்க எல்லாரையும்விட நீ அழகானவ, படிச்சும் இருக்கே, அப்புறம் என்ன?"

பேசிக்கொண்டே பூபாலனின் வீட்டில் வண்டியை நிறுத்திய மனோகர், இறங்குமுன் அவள் கையைப் பற்றி தன் உதட்டில் வைத்து முத்தமிட்டான்.

"ஏன் கை சில்லுனு இருக்கு...ம்?"

"எ... எனக்கு பயமா இருக்குங்க.. இந்த மாதிரி பார்ட்டி கள்லல்லாம் கலந்துகிட்டு பழக்கம் இல்லாததால, நெர்வஸா இருக்கு..."

மனோகர் உதட்டில் வைத்திருந்த விரலை மென்மையாய்க் கடித்தான்.

"ரிலாக்ஸ் பேபி... நான்தான் உன் கூடவே இருக்கப் போறேனே..."

"இருந்தாலும்... வந்துங்க..."

"ப்ளீஸ் நிம்மா.. முதல்ல இந்த வந்துங்க, போயிங்க சமாச்சாரத்தை நீ விடணும்! படிச்சவளா, லட்சணமா கம்பீரமா என்னை மனோ, மனோகர்னு கூப்பிடணும்... எத்த னையோ முறை சொல்லிட்டேன்... நீ ஏனோ என் விருப்பத் தைப் புரிஞ்சி கூப்பிடவே மாட்டேன்ற..."

"ஸாரிங்க... என்னமோ வாயில சட்டுனு பேர் வரவே மாட்டேங்குது..."

"எல்லாம் வரும்! எங்க, இப்ப ஒருதரம் கூப்பிடு..."

"வந்துங்க..."

"நோ.. இப்ப, இந்த கணம் நீ என்னைப் பேர் சொல்லி கூப்பிட்டே ஆகணும்..."

"நாழி ஆச்சி... உள்ளே எல்லாரும் நமக்காகக் காத்திட்டு இருக்காங்க, டார்லிங்... க்விக்..."

"ம்... மனோ.."

"வெரி குட்... இன்னொரு தரம்..."

"மனோ..."

"ஐ லவ் யு மனோனு சொல்லு..."

"ஐ லவ் யூ மனோ!"

"எக்ஸலண்ட்! நீ கூப்பிடறப்ப... என் பேருக்கு தனியா கவர்ச்சி வந்திடர மாதிரி இருக்கு... கமான், லெட்ஸ் கோ..."

**கா**ரிலிருந்து இறங்கிய மனோகர், அந்தப் பக்கம் சென்று கதவைத் திறந்து அவளை இறங்கச் செய்து, இடுப்பை அணைத்தபடி உள்ளே இட்டுச்சென்றான்.

"ஹாய் மனோகர்..."

"குட் ஈவினிங், மனோ..."

"வாவ், யு லுக் ப்யூடிஃபுல், நிம்மா!"

"யார் மனோ, இந்த ரம்பை! உன் மனைவியா?"

"ராஸ்கல்! மெட்றாஸுக்கு அவசரமா ஓடி ஏன் கல்யாணத்த முடிச்சிகிட்டேனு இப்பதானே தெரியுது!"

பாராட்டுக்கள், மனப்பூர்வமான வரவேற்புகள்.

மனோகர் இயல்பாக அத்தனை பேர்கள் நடுவிலும் புகுந்து புறப்பட்டான்.

நண்பர்களைத் தோளில் தட்டினான். அணைத்துக் கொண்டான். கல்யாணத்துக்கும், ரிஸப்ஷனுக்கும் வர இயலாமல் போன ஒவ்வொருத்தரிடமும் நிர்மலாவைப் பெருமையுடன் அறிமுகப்படுத்தினான்.

பூபாலனின் மனைவி நளினி அனைவருக்கும் ட்ரிங்க்ஸ் எடுத்துவர, பூபாலன் டம்ளர்களைக் கையில் கொடுத்தார்.

"மனோ, உனக்கு ஆஸ் யூஷுவல் ஸ்காட்ச்தானே? உன் மனைவிக்கு என்ன? நிர்மலா, சின்னதா ஒரு பெக் தரட்டுமா?"

மனோகர் நிர்மலாவைப் பார்க்க அவள் அவசரமாய் தலையாட்டி மறுத்தாள்.

"சரி, ஹவ் அபௌட் வொய்ன்? அருமையான ரெட்வொய்ன் இருக்கு... தொண்டையிலே வழுக்கிகிட்டு ஓடும்... அது ஒரு க்ளாஸ்ல ஊத்தித் தரேன்..."

"வேணாங்க... ப்ளீஸ்..."

"ஏன் வேணாம்? என் வொய்ஃப்கூட அதான் சாப்பிடறாங்க! என்ன டார்லிங்?"

"எடுத்துக்க நிர்மலா... வொய்ன் ஒரு ட்ரிங்க்கோட சேர்த்தியே இல்ல! ஜஸ்ட் கோலா மாதிரிதான், விறுவிறுனு இருக்கும்.."

நளினி கணவரோடு சேர்ந்து வற்புறுத்தியதையும் ஏற்க இயலாமல், "மன்னிச்சிடுங்க... எனக்கு வேணாம்..." என்றாள் கெஞ்சலாய் நிர்மலா.

மனோகர் அருகில் குனிந்தான்.

"கொஞ்சமா, ஒரு ஸிப் எடுத்துக்க, நிம்மா... ஒரு மரியாதைக்குத்தானே?"

என்னை என் இஷ்டத்துக்கு விடமாட்டார்களா— என்று வேண்டும் பார்வையுடன் நிர்மலா அவனைத் தயக்கத்துடன் ஏறிட....

ஆனந்த் அவள் உதவிக்கு வந்தான்.

"பழக்கமில்லேன்னா விடுங்கப்பா... ஏன் கட்டாயப் படுத்தறீங்க? புதுசுதானே? கல்யாணமாகி மூணு வாரம்கூட ஆகலை.. நாலு தரம் நம்பளை சந்திச்சாங்கன்னா, தன்னால இறுக்கம் குறைஞ்சு சகஜமாயிடறாங்க! அதுக்குள்ள ஏன் ஃபோர்ஸ் பண்ணறீங்க..? ஆல்ரைட் நிர்மலா, டொமாடோ ஜூஸ் சாப்பிடறீங்களா? ஒரு க்ளாஸ் கொண்டுவரச் சொல்லவா?"

இப்போதைக்குத் தப்பினோம் என்ற சந்தோஷத்துடன் பலமாகத் தலையாட்டிய நிர்மலா, 'தேங்க்ஸ்' என்று கூறி ஆனந்தைப் பார்த்துச் சிரித்தாள்.

அன்று இரவு பார்ட்டி முடிந்து அவர்கள் வீடு திரும்பி னதும் இது விஷயமாக மனோகர் பேச்சு எடுக்கவே செய்தான்.

"ஆனாலும் நீ ரொம்ப ஃபஸ் பண்ணிக்கறே, டார்லிங்! ஒரு பெக்கை கையிலே வெச்சிகிட்டு குட்டியா ஸிப் எடுத்தா என்ன ஆயிடும், ம்?"

"ஸாரிங்க.. எனக்கு இதெல்லாம் பழக்கமே இல்லிங்க... பயமாக இருக்கு..."

"பிறக்கறப்பவே எல்லாரும் பழக்கிட்டேவா பிறக்கறோம், ஒரு தரம் ட்ரை பண்ணா பழகிடுது! நளினி அத்தனை சொல்லியும் நீ கேட்கலைன்றதுல எனக்கு ரொம்ப வருத்தம் தான், நிம்மா.."

நிர்மலா பதில் எதும் சொல்லாமல் புடவையை அவிழ்த்து மடித்துவைப்பதில் ஈடுபட்டாள்.

"மெட்றாஸில் பிறந்து வளர்ந்த பெண், டிகிரி படிச்சவ, இத்தனை பயப்படறது எனக்கு ஆச்சர்யமா இருக்கு, நிம்மி!"

புடவையுடன் படுக்கும் வழக்கத்தை விட்டுவிட்டு கணவனின் இஷ்டப்படி நைட் ட்ரெஸ் அணியத் துவங்கி இருந்த நிர்மலா, பாத்ரூமுக்குள் சென்று உள்பாவாடை, பாடியைக் கழற்றி, அதை உடுத்தி, முகம் கழுவி வெளியில் வந்தாள்.

துளி கோல்ட் க்ரீமை எடுத்து முகத்தில் அழுந்தத் தேய்த்துக்கொண்டாள்.

நிர்மலாவின் தாய், ரொம்ப சின்ன வயசிலேயே காலமாகி விட்டாள்.

அண்ணன், அப்பாதான் அவளுடைய உலகம்.

தாயில்லா பெண்ணை கண்டபடி வளர்த்துவிடக் கூடாது என்று கவனமாய் இருந்த தந்தை, பொத்திப்பொத்தி வளர்த்து, டிகிரி படிப்பு முடிந்த கையோடு நல்ல வரனாகத் தேடிக்கொண்டிருந்த சமயத்தில், அவள் மேல் ஆசைப்பட்டு வலியத் தேடிவந்தவன் இந்த மனோகர்.

மனோகர், அவனைப் பெற்றவர்களுக்கு ஒற்றைப் பிள்ளை. தந்தை எப்போதோ காலமாகிவிட, சொந்த மண்ணை விடமாட்டேன் என்று பிடிவாதமாய் தாய்க்கிழவி கிராமத்திலேயே இருக்க, இவன் தனியாய் பெங்களூரில் வசிக்கிறான்.

கிட்டத்தட்ட இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம்... அருமையான வீடு, கார், ஆள், சோஷியல் லைஃப்... அப்புறம் என்ன?

சென்னைக்கு அலுவலக வேலையாய் வந்தவன், பார்த்து வெகுநாட்களான நண்பர் ஒருவரைச் சந்திக்கவென வர, வந்த இடத்தில் கீழ்வீட்டில் குடியிருந்த நிர்மலாவைக் காண—

கண்டதும் காதல் பிறந்துவிட்டது.

நிர்மலா நல்ல அழகு.

தங்கமும் இல்லாமல், மஞ்சளும் இல்லாமல் ஒரு நிறம் நடுத்தர உயரம். வளமான மார்பகங்கள். கருப்பாக இடுப்பையும் தாண்டிக்கொண்டு தொங்கின முடி.

விசாரித்ததில், பி.ஏ. படித்திருக்கிறாள், சமர்த்து, தாய் அற்றவள் என்ற இதர விவரங்கள் தெரியவந்து, அந்த நண்பர் மூலமே சம்பந்தத்தைப் பேசச் செய்ததில், நிர்மலா இப்போது இவனுக்கு மனைவியாகி, இதோ நாட்கள் இருபத்தி இரண்டு ஓடிவிட்டன.

திருமணமான மறுநாள், ஒரு வாரத்துக்கு தேன் நிலவுக் கென ஸ்ரீநகர் சென்றுவந்தவர்கள், நேரே பெங்களூர் வந்து குடித்தனம் ஆரம்பித்துவிட்டார்கள்.

தன் அழகில் மனோகருக்கு அசாத்திய பெருமை என்பதோடு, நாகரிகத்தில் விருப்பமும் அதிகம் என்பது முதல் சில நாட்களிலேயே நிர்மலாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

தடித்தடியாய் பட்டுப் புடவைகள் வேண்டாம், ஷிஃபான் நைலான் உடுத்து— என்றான்.

நகைகளை ஏகத்துக்கு அணியாதே, ஸிம்பிளாக இரு — என்றான்.

ஹை ஹீல்ஸ் போட்டுக்கொள்... உயரத்தைக் கூட்டிக் காட்டுவதோடு, நடையையும் கவர்ச்சியாக்கும் — என்றான்.

ஆண் நண்பர்கள் வீட்டுக்கு வரும்போது நாணிக்கொண்டு உள்ளே இராதே, அவர்களுடன் கலகலப்பாய்ப் பழகு— என்றான்.

பார்ட்டிகளில் சகஜமாய் அனைவருடனும் பேசி வளையவரவேண்டும். கட்டுப்பெட்டித்தனத்துடன் ஒரு பக்கமாய் உட்கார்ந்துவிடக் கூடாது— என்றான்.

இன்னும் விடாமல் எதையெதையோ சொல்லிக் கொண்டேயிருந்தான்.

தாலி கட்டினவர் சொல்லும்போது தயக்கம் என்ன என்று நிர்மலா நினைத்தாலும், வளர்ந்துவிட்ட சூழ்நிலை காரணமாய், சட்டென்று தன்னை மாற்றிக்கொள்வது கஷ்டமாக இருக்க, நாலு பேர் நடுவில் கொஞ்சம் திண்டாடித்தான்போனாள்... இன்றைய தினத்தைப் போல.

**ப**டுக்கையில் அமர்ந்த நிர்மலா புருஷன் பக்கம் திரும்பி, அவன் படித்துக்கொண்டிருந்த பத்திரிகையைத் தழைத்தாள்.

"கோவமாங்க?"

"என்னது?"

"கோவமாங்க—னு கேட்டேன்."

"இந்த'ங்க' வை விடுன்னு சொன்னேன், இல்லை?"

"ஸாரிங்க... அய்யோ, திரும்ப அதானே வாயிலே வருது! ஸாரி மனோ!"

வெகுளியாய் அவள் பேச, மனோகரின் உதடுகளில் ஒரு புன்னகை மலர்ந்தது.

"இந்த மாதிரி கண்ணை விரிச்சி, உதட்டைக் குவிச்சி நீ பேசறப்போ, உன்னை அப்படியே கடிச்சித் தின்னிடணும் போலத் தோணுது!"

"அவ்வளவுதானே.. தின்னுடுங்க! அப்புறமாவது கோவம் குறையுமில்லே?"

அவளை இழுத்து மனோகர் அணைத்துக்கொண்டான்.

"நீ அழகு, சமர்த்து, கெட்டிக்காரின்றதெல்லாம் எனக்கு மட்டும் தெரிஞ்சா போதுமா? என் ஃப்ரெண்ட்ஸ்களுக்கும் தெரிஞ்சாதானே, எனக்குப் பெருமை? ம்?"

"உங்களுக்குத் தெரிஞ்சா, எனக்கு அது போதும், மனோ..."

"எனக்குப் பத்தாதே... 'பாருங்கடா என் மனைவிய... அவ அழகு மட்டுமில்ல, கெட்டிக்காரிகூட!'—ன்னு பீத்திக்கத் தோணுதே..."

"............

"இன்னிக்கு நீ அந்த அளவுக்கு ஃபஸ் பண்ணியிருக்க வேணாம், நிம்மா... வொய்ன் குடிக்கிறதை என்னமோ விஷம் குடிக்கச் சொன்ன மாதிரி பயந்திட்டியே..."

"ஸாரி மனோ.... எனக்கு உண்மையிலேயே பயமாதான் இருந்துச்சு..."

"நா இருக்கறப்பகூடவா? தப்புக் காரியத்த உன்னை செய்யச் சொல்லுவேன்னு நீ நம்பறியா?"

"இல்லே... ஆனாலும் இதுவரைக்கும் பழக்கமில்லாத தால் எப்படியோ இருக்கு."

"சரி, இன்னிய விட்டுடு... இனிமே இந்த மாதிரி அசட்டுத் தனமா நடந்துக்காதே... சோஷியலா நடந்துக்கறதுல தப்பு என்ன? எனக்கு நீ அப்படி இருக்கிறதுதான் பிடிக்குதுனு சொல்லியும் தயங்கினா... இட் வில் ஹர்ட் மீ... புரியுதா?"

சின்னக் குரலில் கணவன் நிதானமாகப் பேச, பதில் கூறாமல் 'சரி' என்று தலையசைத்ததோடு நிற்காமல், அடுத்து வந்த நாட்களில் பிரயத்தனப்பட்டு தன்னை சிறுகச் சிறுக மாற்றிக்கொள்ள நிர்மலா முனைந்தாலும், நினைத்ததை உடனே செயலாற்ற முடியாதபடி, திருமணமான மூன்றாம் மாதமே அவள் கர்ப்பமுற்றாள்.

## 2

"என்ன சொல்றே நிம்மா, நீ?"

"லேடி டாக்டர்கிட்டே போனா தேவலைனு சொன்னேன், மனோ..."

"எதுக்கு?"

"லேடி டாக்டர்கிட்ட எதுக்குப் போவாங்க? அதுக்குத் தான்!"

கிட்டே வந்து தோளைப் பற்றி, "விளையாடாதே டார்லிங்!" என்று மனோகர் கெஞ்ச, நிர்மலா அவனை நிமிர்ந்து பார்த்து சிரித்தாள்.

"இதுல விளையாட்டு என்ன, மனோ?"

"எத்தனை நாள் ஆகியிருக்கு?"

"ம்ம்... நாற்பத்தியிரண்டு..."

"ஏன் என்கிட்ட முதல்லியே சொல்லலை?"

"சொல்லணும்னு தோணலை— இது ப்ரக்னென்ஸியா, இல்லையானு சந்தேகமா இருந்திச்சு..."

"இப்ப?"

"எனக்கு உறுதியா புரிஞ்சிபோச்சி, எதுக்கும் டாக்டர் கிட்ட காட்டி கன்ஃபார்ம் பண்ணிக்கலாமேன்னுதான்..."

மனோகர் அவசரமாய் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து புகையை இழுத்து நெஞ்சில் நிரப்பிக்கொண்டான்.

நிர்மலா அவன் பின்னால் சாய்ந்து கைகளால் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

"சேதி கேட்டு சந்தோஷப்படுவீங்கன்னு நினைச்சேன், மனோ..."

"என்ன மனோ?"

"இல்லே இது எப்படி உண்டாச்சு? நாமதான் கேர்ஃபுல்லா இருக்கமே..."

"தவறுதலா நடந்திருக்கலாம்..."

சிகரெட்டைத் தேய்த்து அணைத்த மனோகர், டைரக்டரியைப் புரட்டி லேடி டாக்டரோடு போனில் தொடர்பு கொண்டு, அன்று மாலைக்கே அபாய்ன்ட்மெண்ட் வாங்கிக்கொண்டான்.

போனார்கள். டாக்டர் செக்கப் செய்தார். டெஸ்ட்டுகள் எடுத்தார்.

மேலும் சில நாட்கள் தாமதித்துப் பார்த்துவிட்டு கர்ப்பம்தான் என்பதை உறுதி செய்தார்.

அன்றிரவு மனோகர் அவளை மடியில் கிடத்திக்கொண்டு தாஜா செய்யும் விதமாய்ப் பேசினான்.

"இது நமக்கு இப்ப வேணுமா, டார்லிங்?"

"எது?"

"இந்தக் குழந்தைதான்..."

தடக்கென்று நிர்மலா எழுந்து உட்கார்ந்தாள்.

"வாட் டு யு மீன்?"

"இவ்வளவு அவசரமா நமக்குக் குழந்தை வேணுமானு யோசிக்கிறேன், நிம்மா..."

"எனக்கு வேணும்னு தோணலை... நாம ரெண்டு பேரும் சின்ன வயசுக்காரங்க. எனக்கு முப்பது; உனக்கு இருபத்தி ஒண்ணு... வாட்ஸ் த ஹரி? ரெண்டு மூணு வருஷம் ஜாலியா இருந்திட்டு அப்புறமா குழந்தை பெத்துக்கலாமேனு எனக்குத் தோணுது...."

"ஸோ?"

"ஸோ, இதை இப்பவே, ரொம்ப நாளாவறதுக்கு முன்னாலியே, அபார்ட் பண்ணிட்டா என்ன?"

உடம்பும் மனசும் ஒரு முறை தூக்கிவாரிப்போட, "என்ன?" என்று அதட்டலாய்க் கேட்டாள் நிர்மலா.

"நா இப்ப என்ன சொல்லிட்டேன்னு நீ இந்தப் பதட்டம் பதர்றே, ம்? லைஃப்பை அனுபவிக்காம அதுக்குள்ள குழந்தை தொந்தரவெல்லாம் எதுக்குனுதானே சொல்றேன்!"

"குழந்தைன்னா தொந்தரவா, மனோ?"

"இல்லியா பின்னே? ஹாய்யா இங்க, அங்க போக முடியாது... நைநைனு சதா அழுதுகிட்டு... ஓ ஹெல்! இதுக்கு இப்ப நிஜமாவே என்ன அவசரம், டார்லிங்?"

"அதுக்காக, உண்டாயிட்டதை அழிக்கச் சொல்றது நியாயமா, மனோ?"

"முழுக் குழந்தையா உண்டாயிடுச்சி? உள்ளே இன்னும் உருத்தெரியாத பிண்டமாதானே அது இருக்கும்... அதுக்குத்தான் சொல்றேன், நாளைக் கடத்தாம காரியத்தை செஞ்சிடறது நல்லது, நிம்மா..."

நிர்மலா கண்களை விரித்து அவனை வெறித்தபடி மாட்டேன் என்று தலையாட்டினாள்.

"நா இதுக்கு உடன்பட மாட்டேன், மனோ... நிச்சயம் மாட்டேன்!"

"வொய் டார்லிங்? நம்ம நல்லதுக்கும், சந்தோஷமான வாழ்க்கைக்கும்தானே சொல்றேன்?"

"ஐம் ஸாரி.. என்னாலே சம்மதிக்க முடியாது, மனோ..."

"சும்மா முடியாது முடியாதுன்னா? காரணம் என்ன?"

எரிச்சலுடன் மனோகர் பேச, நிர்மலாவின் கண்களில் ஈரம் பளபளத்தது.

"இ... இதுக்கெல்லாம் காரணம் சொல்லிட்டிருக்க முடியுமா? முதமுதலா உண்டானதை அழிக்க, நா சம்மதிக்க மாட்டேன்! ப்ளீஸ் மனோ... புரிஞ்சிக்குங்க..."

"நீதான் என் நிலைய புரிஞ்சிக்க மாட்டேன்ற, நிம்மா... இது ஒண்ணும் பாவ காரியம் இல்லே... நாம, இதை உருவாக்கினவங்க, இப்போதைக்கு இது வேணாம்னு தீர்மானம் பண்ணறோம். அவ்வளவுதானே! இதுல அப்செட் ஆக என்ன இருக்கு? வேணும்ன்றப்போ, திரும்ப கன்ஸீவ் ஆயிட்டாபோவுது!"

**வ**ழக்கமாக புருஷன் எது சொன்னாலும் சரி என்று சம்மதிக்கும் நிர்மலா, இந்த முறை மட்டும் பிடிவாதமாய் மறுக்க, மனோகர் அவளிடம் என்னென்னவோ சொல்லிப் பார்த்தான், கெஞ்சி கொஞ்சிப்பார்த்தான், 'நீ இதை கலைக்க சம்மதிச்சிட்டா அடுத்த மாசமே உன்னை சிங்கப்பூருக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன்' — என்று ஆசை காட்டிப் பார்த்தான்.

எதற்கும் நிர்மலா இணங்காததோடு, நாட்களும் மெள்ள மெள்ள நகர்ந்துபோய் நாலாம் மாசம் பிறந்துவிட, சரி இனியும் இந்தப் பேச்சை பேசுவது அனாவசியம், சந்தோஷத் தோடு குழந்தையை ஏற்கவாவது முன்வரலாம் என்ற தீர்மானத்துக்கு ஒருவழியாய் மனோகர் வந்தான்.

இதன் நடுவில், தனக்காக குழந்தைக்கு சரி என்று சொல்லிவிட்ட கணவனை, இதர விதங்களில் திருப்தி செய்வது தன் கடமை என்பது போல, அவனுக்குப் பிடித்த மான பலவற்றையும் செய்ய நிர்மலா முனைந்தாள்.

“ஐயே— இதெல்லாம் எதுக்கு மனோ? எனக்குப் பழக்கமில்லை!” என்று, அவன் வாங்கித்தர முன்வந்து வேண்டாம் என்று தடுத்த சல்வார் கமீசை, வலிய வாங்கித் தரச்சொல்லி உடுத்திக்கொண்டாள்.

ப்யூட்டி பார்லருக்குச் சென்று, மனோகர் ஆசைப்பட்ட விதத்தில், சாட்டையாய்த் தொங்கிய முடியைத் தோளோடு வெட்டிக்கொண்டு வந்தாள்.

பார்ட்டிகளில் கையில் ஒரு கிண்ணம் மதுவை வைத்துக் கொண்டு சிரிக்கச்சிரிக்கப் பேசப் பழகினாள்.

பிற ஆடவர்கள் தொட்டுப் பேசுவதை அருவருத்து வெறுத்தவள், அந்த ஸ்பரிசங்களை பொறுக்கத் துவங்கினாள்.

முக்கியமாய், மனோகருக்குப் பிடிக்குமென மேல்நாட்டு நாகரிகத்தின்படி, வெஸ்டர்ன் டான்ஸ் ஆடக்கூடக் கற்றுக் கொண்டாள்.

மொத்தத்தில், மேற்கொண்டு ஏழு மாசங்கள் முழு சாய்ப் போய், பெண் சுதாவைப் பிரசவிப்பதற்குள், அவளைப் பார்த்தவர்கள், அந்த நிர்மலாவா இது என்று அதிசயிக்கும் விதத்தில் அடியோடு மாறித்தான்போனாள்.

## 3

“நிம்மா?”

“எஸ்...”

“நாதான் மனோ பேசறேன். போர்ட் மீட்டிங் முடிய நாழியாகும் போல இருக்கு.. நீ வேணா முதல்ல சுந்தர்லால் வீட்டுக்குப் போயிடறியா?”

“நீங்க வந்ததும் சேர்ந்தே போலாமே, ப்ளீஸ்...”

"இல்லே நிம்மா, நா புறப்படவே ஏழரை, எட்டு ஆயிடும் போல இருக்கு... அதுக்கு மேல நாம போனா நல்லா இருக்காது... ஹி வில் மிஸ்டேக் அஸ்."

"தனியா எப்படிப் போறது, மனோ?"

"தனியாவா போகச் சொல்றேன்! ஆனந்த் உன்னை பிக்கப் செஞ்சி அழைச்சிட்டுப் போவான். அவனுக்கு நா போன் பண்ணிடறேன்."

"இது என்ன புதுப் பழக்கம்? எனக்குப் பிடிக்கலை..."

"யாரோ முன்பின் தெரியாத ஆளோட போகணும்ன்ற மாதிரி நீ தயங்கினா, ஐம் சர்ப்ரைஸ்ட்!"

"அதுக்காக சொல்லலை, மனோ.. நீங்க இல்லாம, நா மட்டும்..."

"ஆர்க்யூ பண்ணாத, இப்ப நேரமில்ல... வெட்டிங் ஆனிவர்ஸரி பார்ட்டி... கேக் வெட்டறப்ப நாம ரெண்டு பேரும் இல்லாட்டி நல்லா இருக்காது.."

"ஓகே தென்..."

"குட்கேர்ல்.. நா ஆனந்துக்கு போன் பண்ணிடறேன்... என்ன உடுத்திக்கப்போறே?"

"ஆரஞ்ச் ஸில்க் சாரி."

"நல்லா இருக்கும். அதோட தங்க நகை போட்டுக்க... இட் வில் லுக் வெரி நைஸ்... எவ்வளவு சுருக்க வர முடியுமோ நா வந்திடறேன். பை."

●●●

"தூங்கிட்டியா, நிம்மி டார்லிங்?"

"இல்லே... என்ன சொல்லுங்க.."

"சாயங்காலமே சொல்லணும்னு நினைச்சேன்; கெஸ்ட் வந்தாங்களா, மறந்திடிச்சி... வர்ற ஞாயிறு எங்க ஆபீஸர்ஸ் கிளப்லேந்து எல்லாருமா மைசூர், சாமுண்டி ஹில்ஸ் எல்லாம் போக திட்டம் போட்டிருக்காங்களாம்.. 'நீங்களும் உங்க மனைவியும் அவசியம் வரணும். நீங்க வந்தாதான் கலகலன்னு இருக்கும்'னு செக்ரட்டரி ராம் கௌடா

சொன்னான். சரின்னு சொல்லிட்டேன். அன்னிக்கு நமக்கு வேற ப்ரோக்ராம் ஒண்ணும் இல்லியே?"

"முழு நாளுமா, மனோ!"

"ம்ம்... காலைல ஆறு மணிக்குக் கிளம்பினா ராத்திரி ஒன்பதாயிடுமாம் திரும்ப..."

"சுதாவ அப்படி முழுநாளும் எடுத்துகிட்டுப் போக முடியுமா? ஹார்ட்லி மூணு மாசக் குழந்தையாச்சே!"

"அவளை எதுக்கு வெயில்ல இழுத்தடிக்கணும்? ஆயா பாத்துக்கா மாட்டாளா? ஒரு நாள்தானே!"

"நாள் முழுக்க இதுவரைக்கும் நா விட்டுப் போனதில்லையே, மனோ.."

"ஸோ வாட்! நீ பால் கொடுத்தாலும் யோசிக்கணும்... அதான் கம்ப்ளீட்டா இல்லியே! அப்புறம் என்ன? கௌடா நீ வரலைனா ரொம்ப ஃபீல் பண்ணுவான்.. போயிட்டு வந்திடலாம்; என்ன?"

"உங்க இஷ்டம்... எனக்குத் தூக்கம் வருது.. குட் நைட்.."

●●●

"என்ன மனோ.. இன்னிக்கு இத்தனை சுருக்க வந்திட்டீங்க? மழை காலைலேந்து விடாம இருக்கறத்துக்கு இதானா காரணம்?"

"ஆனந்த் போன் பண்ணான். யாமினி கிருஷ்ண மூர்த்தியோட டான்ஸுக்கு டிக்கெட் வாங்கியிருக்கானாம். நிம்மியையும் அழைச்சிட்டு வாப்பா... நல்லா ஆடுவாங்க.. மிஸ் பண்ணாதனு சொன்னான். முன்னே ஒரு சமயம் இவங்க டான்ஸைப் பார்க்கணும்னு நீ சொன்னது ஞாபகம் வந்திச்சு, கிளம்பி வந்திட்டேன். கமான்... பத்து நிமிஷத்துல ரெடியாகணும்..."

"மனோ..."

"ம்?"

"இல்லே.. வந்து..."

"என்ன தயக்கம்?"

"நாலு நாளா தினம் வீட்டுலே தங்காம நாம பார்ட்டி, சினிமா அது, இதுனு போய்க்கிட்டே இருக்கோம். இன்னிக்கு வேணா சுதாவோட இருக்கலாமேனு நினைச்சேன்..."

"அஞ்சு மாசக் குழந்தையோட எத்தனை நாழி உட்கார்ந்துகிட்டு இருக்கறது! ஆயா உன்னைவிட நல்லா பாத்துக்கறா... கவலைப்படாம கிளம்பு, டார்லிங்... நாழி ஆச்சு."

●●●

"ஹலோ ஆனந்த்.."

"ஹேய், நிம்மா... நீங்க எங்க இந்தப் பக்கம்!"

"இந்தக் கேள்வி நா இல்லே கேட்கணும்! ரஸ்ஸல் மார்க்கெட்டுல உங்களுக்கு என்ன வேலை? நா காய்கறி பழம் வாங்க வந்தேன்..."

"பூபாலன் வீட்டுக்குப் போயிருந்தேன். நளினி பூ வாங்கணும்னு சொல்லிட்டிருந்தாங்க. இந்த வழியா வர்றமே வாங்கிக் கொடுக்கலாமேனு நுழைஞ்சேன். நீங்க காய் வாங்கிட்டீங்களா? என்கூட வந்து பூவெல்லாம் செலக்ட் பண்ண முடியுமா, நிம்மா? லேடீஸ் டேஸ்ட் அலாதி தானே.."

"ஓகே. இந்தக் கடைல பார்க்கலாமா? அந்த ரோஸ் கொத்து நல்லா இருக்கு... ஆனா, விலை கொஞ்சம் அதிகம்.."

"விலையப் பாக்காதீங்க. நாலு கொத்தா வாங்குங்க."

"நாலா?"

"ஆமா, உங்களுக்கு ரெண்டு, நளினிக்கு ரெண்டு."

"எனக்கெதுக்கு ஆனந்த்! கூட வந்து வாங்கினதுக்குக் கூலியா?"

"எப்படி வேணா வச்சிக்குங்க! ஆமா, இப்ப வீட்டுக்குப் போக அவசரமா? ஐஸ்க்ரீம் சாப்பிட்டுப் போலாமா?"

"அரை மணிலே விட்டுடுவீங்கன்னா, வரேன்."

"ஷ்யூர்! வாங்க.. லெட்ஸ் கோ."

●●●

"சினிமா எப்படி இருந்தது, நிம்மா?"

"நாட் பேட்... நீங்க கூட வர்லைன்றதுதான் குறை."

"என்ன பண்றது கடைசி நிமிஷத்துல ஒரு க்ளையன்ட் வந்திட்டார். நளினிக்குப் படம் பிடிச்சிதா? சிவாஜி படம்னா அவங்களுக்கு உயிராச்சே!"

"சீனுக்கு சீன் கர்சிஃபை கையிலே வெச்சிகிட்டு அழுதுகிட்டேயிருந்தாங்க. பிக்சர்லேந்து எல்லாரும் க்ளப்புக்குப் போனாங்க... நா வரலை, என்ன வீட்டுல இறக்கி விட்டுடுங்கனு சொல்லிட்டேன்."

"நீயும் போயிட்டு கொஞ்ச நாழி கார்ட்ஸ் ஆடிட்டு வரதுதானே!"

"நீங்க வீட்டுல காத்திட்டிருக்கிறப்ப நா அங்க சீட்டு விளையாட இப்ப என்ன நிர்ப்பந்தம்? குழந்தை எங்க?"

"ஆயா ப்ராம்ல வச்சி தள்ளிகிட்டுப் போயிருக்கா— ஆமா, நீ வரவர ப்ரிட்ஜ் ரொம்ப நல்லா விளையாடறியாமே, நிம்மா?"

"யார் சொன்னாங்க?"

"எல்லாரும்தான்! அடேயப்பா— நிம்மா புத்தி யாருக்கும் வராது... எங்களையெல்லாம் ஆட்டத்துல அடிச்சிடுவா போலயிருக்குனு நேத்துகூட பாஸ்கர் சொன்னான். நாலு நாள் முன்னால கிளப்லே அவன்கூட விளையாடினியாமே?"

"ம்ம்... நீங்க பாம்பே போயிருந்தீங்களே, அப்பத்தான்... பொம்பளைங்களாவது ப்ரிட்ஜ் விளையாடறதாவது! அதுக்குத் தனி மூளை வேணும்! ரம்மி விளையாடதான் இவங்கள்ளாம் லாயக்குனு சுந்தர்லால் கேலி பண்ணான். எனக்குக் கோபம் வந்திடுச்சி! ரைட், யாருக்கு மூளை இருக்கு, யாருக்கு இல்லைன்னு பார்த்திடலாம் வாங்கனு கூப்பிட்டேன். பாஸ்கரும் நானும் பார்ட்னர்ஸ், சுந்தர்லாலும் ஆனந்தும் ஒரு ஸெட்... ரெண்டு தரம் க்ராண்ட் ஸ்லாம் அடிச்சேன். அத்தனை பேரும் அசந்திட்டாங்க."

"நிம்மு கண்ணா, உனக்கு அழகு மட்டுமில்லே, புத்திசாலித்தனமும் எக்கச்சக்கத்துக்கு இருக்கு! இதை

எல்லாம் கட்டுப்பெட்டித்தனமாக நடந்துவிட்டு வேஸ்ட் பண்ணறது தப்பு! நா முன்னே சொன்னது ஏன்னு இப்பப் புரியுதா? உன் திறமை இப்பவாவது உனக்கு விளங்குதா? பத்து பேர் இருந்தாலும் தனியா பளிச்சிடக்கூடிய அழகு, கெட்டிக்காரத்தனம் உன்னுது... ஐம் ஸோ ப்ரவுட் ஆஃப் யூ..."

"நிஜமாவா மனோ?"

"சத்தியமா..."

●●●

மனோகர் எக்கச்சக்க கோபத்தில் இருந்தான்.

பாதி பிடித்துக்கொண்டிருந்த சிகரெட்டைத் தேய்த்து அணைத்தான்.

அறையின் நீளத்தை அளக்கிற தினுசில் இப்படியும் அப்படியும் நடந்தான்.

மீண்டும் சிகரெட்டைப் பற்றவைத்து, வேகமாய்ப் புகையை இழுத்தான்.

மணிக்கட்டைத் திரும்பி கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

உட்கார்ந்தான், எழுந்தான், நடந்தான்.

மணி எட்டரை.

இன்னும் நிர்மலா வீட்டுக்கு வரவில்லை.

'இத்தனை நாழி ஆக்காதே; தினமும் கிளப் அங்கே, இங்கே என்று சுற்றாதே' — என்று சமீப நாட்களில் பத்து தரம் சொல்லிவிட்டான். காதில் போட்டுக்கொள்ளாமல் தன் இஷ்டப்படியே நடக்கிறாள்.

வாட்ஸ் ஆல் திஸ்?

உள்ளே எதற்காகவோ சுதா சிணுங்குவதும் ஆயா, 'என் கண்ணில்ல... தங்கமில்ல? சொல்றதைக் கேளும்மா, ராஜாத்தி' என்று சமாதானப்படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள்.

சில நிமிஷங்களில் சுதாவின் அழுகை பெரிசாக, எரிச்சலுடன் உள்ளறைக்குள் மனோகர் எட்டிப் பார்த்தான்.

"இப்ப எதுக்காக இந்தக் கத்தல்? ம்?"

அப்பாவைக் கண்டதும் நீர் நிறைந்த கண்களுடன் சுதா ஆயாவின் பின்னால் ஒண்டிக்கொண்டாள்.

அடக்கமாட்டாமல் எழுந்த விசும்பல்கள் மட்டும் நிசப்தமான அறையில் உரத்துக்கேட்டன.

"என்ன ஆச்சு? கேக்கறது காதுல விழல?"

"ஒண்ணும் இல்லிங்க..."

"ஒண்ணும் இல்லாமலா இந்த அழுகை அழறா? ஆயா, ஆனாலும் நீ ரொம்பத்தான் இவளுக்கு எடம் கொடுக்கறே! மணி எட்டரை... தூங்கப் போகாம எதுக்காக இன்னும் சுதா முளிச்சிட்டு இருக்கா? காலைல எழுந்து பள்ளிக்கூடம் போகவேணாமா? சாப்பிட்டாச்சு இல்லே? தூங்க வேண்டியது தானே?"

"தூங்கத்தான் அழைச்சிட்டு வந்தேங்க... வந்து..."

"என்ன வந்து, போயி.."

"சுதாவோட சினேகிதிங்க எல்லார் வீட்டுலேயும் தூங்கறத்துக்கு முன்னாலே கதை சொல்றாங்களாம். என்னையும் சொல்லச்சொல்லி தொந்தரவு செய்யுது."

"சொல்லிடறதுதானே! இது என்ன பெரிய விஷயமா?"

"அது இல்லிங்க... எல்லா பசங்களுக்கும் அப்பாவோ, அம்மாவோ கதை சொல்றாங்களாம்... இங்கிலீஷ்ல என்னையும் அந்த மாதிரி சொல்லுனு.."

தயக்கத்துடன் ஆயா நிறுத்த, கன்னத்தில் அவள் அறைந்துவிட்ட வலியுடன் மனோகர் திடுக்கிட்டு விழித்தான்.

ஒரு நிமிஷம் அப்படியே நின்றுவிட்டு, என்ன பேசுவது என்று புரியாமல், கைகளை உயர்த்தி, தோளைக் குலுக்கி, "சரி... சரி... பேசிட்டு நிக்காம படுக்க வை. சத்தம்

வந்திச்சின்னா எனக்குக் கோவம் வரும்" என்று பொதுவாகச் சொல்லி, கூடத்துக்கு வந்தான்.

**ம**ணி ஒன்பது...

நிர்மலா இன்னும் வரவில்லை.

ரிஸீவரை எடுத்து கிளப் நம்பரை சுழட்டி, கார்ட் ரூமுக்கு தொடர்பு வாங்கிக்கொண்டான்.

"ஹலோ... நா மனோகர் பேசறேன். அங்க மிஸஸ் மனோகர் இருக்காங்களா?"

"குட் ஈவ்னிங், சார். திஸ் ஈஸ் ஹெட் ஸ்டூவர்ட் பெலியப்பா. அம்மா பத்து நிமிஷம் முன்னாலதான் ஆனந்த் சாரோட புறப்பட்டுப் போனாங்க. மிஸ்டர் பிரசன்னா இருக்கார், கூப்பிடவா?"

"வேணாம்... தாங்க்ஸ்."

தொடர்பைத் துண்டித்த மனோகர், சோபாவில் சாய்ந்து சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டான்.

உள்ளுக்குள் தோன்றிவிட்ட நெருடல் இன்று அதிகமாகி விட்டதைப் போலத் தோன்ற, கண்களை மூடிக் கொண்டான்.

சில மாசங்களாக நிர்மலாவின் போக்கில் ஏதோ மாற்றம் இருப்பது போன்ற உணர்வு.

தன்னை அதிகம் மதிக்காத மாதிரி... குழந்தை, வீட்டைப் பற்றி லவலேசமும் கவலைப்படாத மாதிரி... நான், என் விருப்பு வெறுப்புகள் முக்கியம் என்று வெளிப்படையாகவே தெரிவிக்கிற மாதிரி...

முதலில் இந்த உறுத்தலை அசட்டை செய்ய முயன்று, அது முடியாமல் போனதும் மெதுவாக நிர்மலாவிடம் மனோகர் பேச்செடுத்தான்.

"வரவர நீ அதிகமா வீட்டுலே இருக்கறதே இல்லை, டார்லிங். வெளிலே போறதைக் கொஞ்சம் குறைச்சிக்க, நிம்மா."

"மத்தியானம் பூரா வீட்டுலேதான் சும்மா உட்கார்ந்திட்டு இருக்கேன், மனோ. நாலு மணிக்கு மேலே வெளியிலே போயிட்டு, கார்ட்ஸ் ஆடிட்டு வரேன். இது தப்பா?"

"தப்புனு நா சொல்ல வரலை, நிம்மா... இப்படி அலைஞ்சா உன் உடம்பு கெட்டுப்போயிடுமேன்ற அக்கறைலதான் சொல்றேன்."

"தாங்க்ஸ் மனோ, ஆனா நீங்க அனாவசியமா கவலைப்படறீங்க. ஐம் பர்ஃபெக்ட்லி ஆல்ரைட்."

முதலில் மெதுவாகச் சொன்னவன், எதையும் லட்சியம் பண்ணாமல் தொடர்ந்து தான் இருக்கிற விதத்திலேயே அவள் இருக்க முற்பட, குரலை லேசாக எழுப்பிக் கண்டிக்க... அந்த வீட்டில் குட்டிக்குட்டியாய் சண்டைகள் ஜனிக்கத் துவங்கின.

"ஒரு நாள் விடாம நீ இப்படி கிளப், பார்ட்டினு அலையறது எனக்குப் பிடிக்கலை, நிம்மா."

"எனக்குப் பிடிக்குதே!"

"அப்பப்ப வீட்டுலே நீயும் நானும் குழந்தையோட நிம்மதியா இருக்கணும்னு நா நினைக்கிறேன்."

"நீங்க வேணா இருங்க... நாள் பூரா வீட்டுலே இருந்தா எனக்கு போர் அடிக்குது."

"நாள் தவறாம ஆம்பிளை தடியன்களோட கிளப்ல சீட்டாடறது மட்டும் போர் அடிக்கலயோ?"

நிர்மலா கண்களை இடுக்கிக்கொண்டு கணவனைப் பார்த்தாள். "யு ஆர் ஜெலஸ்" என்றாள். தொடர்ந்து அவனோடு பேச விருப்பமில்லாத மாதிரி திரும்பி நடந்து விட்டாள்.

இன்னும் ஒருநாள் இந்த சண்டை கொஞ்சம் தீவிரப் பட்டுப்போனதில், முதல் முறையாக மனோகர் கை நீட்டி அவளை அடித்துவிட்டான்.

நாலு நாட்கள் போல ஊரில் இல்லாமல் இருந்துவிட்டு வீடு திரும்பியவனுக்கு, மனைவி தான் வருவதையும் பொருட்படுத்தாமல் வழக்கம்போலக் கிளப்புக்குப்

போய்விட்டது கோபத்தை உண்டாக்க. போன் பண்ணி அவளோடு பேசினான்.

"ஹலோ டார்லிங், எப்ப வந்திங்க? வீட்டுலே என்ன பண்ணறீங்க? கிளப்புக்கு வாங்களேன்."

"நா வரதா இல்லே, நிம்மா... தலை வலிக்குது. நீ வந்திடு."

"இப்பவா? கஷ்டம் மனோ! ரொம்ப ஸீரியஸா ஆடிக்கிட்டு இருக்கோம். நாங்க ஒருதரம் ரப்பர் 'வின்' பண்ணியாச்சி! நீங்க வாங்களேன்... இங்க ஆனந்த், பாஸ்கர், ப்ரசன்னா எல்லாரும் இருக்காங்க."

"நா ஊர்லேந்து வந்திட்டதைச் சொல்லிட்டு, நீ புறப்பட்டு வந்திடு, நிம்மா."

"திரும்பத்திரும்ப அதையே சொன்னா எப்படி, மனோ? பாதி ஆட்டத்தில் வர முடியாது!"

அன்றைக்கு அவளை எட்டே முக்கால் மணி சுமாருக்கு ஆனந்த் வீட்டில் இறக்கிவிட்டபோது, மனோகர் அறையை விட்டு வாசலுக்கு வரவே இல்லை.

உள்ளே வந்தவள், கைப்பையை படுக்கையில் எறிந்து விட்டு பாத்ரூம் சென்றுவந்து நிதானமாய் 'ஹாய்' என, அடக்கிவைத்திருந்த கோபம் ஜ்வாலை விட்டு எரியத் துவங்கியது.

கண்களில் லேசான சிவப்பு.

சீட்டு விளையாடுகையில் ஓரிரு பெக் மற்றவர்களுடன் சேர்ந்து அருந்தியிருக்கவேண்டும்.

இவன் கோபத்தையோ, மௌனத்தையோ உணராத மாதிரி, "கிவ் மீ எ சிகரட், மனோ" என்று அவள் கை நீட்ட, மனோகர் பட்டென்று வெடித்தான்.

"வெட்கமாயில்லே உனக்கு?"

"எதுக்கு?"

"இப்படி ஒன்பது மணி வரையிலும் கிளப்புல சீட்டாடி, குடிச்சிட்டு உட்கார்ந்திருந்ததும் இல்லாம, என்கிட்டயே வந்து சிகரேட் கேக்கறியே, அதுக்கு!"

நிர்மலா உரக்கச் சிரித்தாள்.

"இதுல வெட்கப்பட என்ன இருக்கு, மனோ! நா ட்ரிங்ஸ் எடுத்துக்கறதும், சிகரெட் பிடிக்கறதும் உங்களுக்குத் தெரிஞ்ச விஷயம்தானே! இன்ஃபாக்ட் முதல்ல குடிக்கச் சொன்னதே நீங்கதானே!"

மனோகர் நெற்றியில் ஓங்கி அறைந்துகொண்டான்.

"தப்புதான்! இப்படி அளவுக்கு மீறி நீ போயிடுவேனு தெரியாம நா உன்னை நாகரிகமாக இருக்கச் சொன்னது தப்புதான்..."

நிர்மலா அலுப்புடன் படுக்கையில் சாய்ந்தாள்.

"ட்ராமா டைலாக் பேசாதீங்க, மனோ! வரவர உங்ககிட்ட இது ஒரு பெரிய தொந்தரவாபோயிடிச்சி..."

துளி பொறுப்பு இல்லாமல், மரியாதை இல்லாமல் அவள் பேச, மனோகர் தாவிச் சென்று அவளை நெருங்கினான். வேகமாய், கையைப் பிடித்து உட்காரவைத்து கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

"வெளியூருக்குப் போயிட்டு வந்த புருஷன்கிட்ட ஒரு வார்த்தை அக்கறையாப் பேசமுடியலை... குழந்தை சாப்பிட்டாளா, தூங்கினாளானிட்டு துளி கவலை இல்லை! நீயும் ஒரு பொம்பளைதானா? த்தூ... டிஸ்கஸ்டிங்!"

கன்னத்தில் கையை வைத்து அவனை வெறித்த நிர்மலா, அப்படியே சில நிமிஷங்களுக்கு உட்கார்ந்திருந்தாள். அப்புறம் மெதுவாக எழுந்து நைட் ட்ரெஸ்ஸுடன், விருந்தாளிகள் படுக்கையறைக்குச் சென்று, கதவை அறைந்து மூடித் தாளிட்டுக் கொண்டாள்.

அன்றிலிருந்து, அடுத்து வந்த இந்த ஒரு மாசமாய் அவள் படுப்பது அந்த அறையில்தான்.

புருஷன், மனைவி நடுவில் நீளமான பேச்சுவார்த்தைகள் அடியோடு நின்றுபோய்விட, அவசியமான கேள்விகள்; இல்லை, ஆமாம்... என்ற பதில்கள்.

**பி**டித்துக்கொண்டிருந்த சிகரெட் அடிவரைக்கும் புகைந்து, விரலைச் சுட, மனோகர் கையை உதறிக் கொண்டான்.

கீழே விழுந்துவிட்ட சிகரெட் துண்டை எடுத்து, பால்கனி கதவைத் திறந்துகொண்டு சென்று தோட்டத்தில் தூர எறிந்தான்.

கதகதத்த உடம்புக்கு குளிர்காற்று இதத்தைத் தந்தது.

ஆகாயம் மூட்டமாய் இருக்க, இங்கொன்றும் அங்கொன்றுமாய் நட்சத்திரங்கள் பளிச்சிட்டன.

சுதா உள்ளே தூக்கத்தில் ஏதோ பிதற்றி அழுவது சன்னமாய்க் கேட்க, குழந்தையின் நலனை உத்தேசித்தாவது இன்றைக்கு நிர்மலாவுடன் பேசி எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு கட்டியாகவேண்டும் என்ற தீர்மானத்துடன் அவன் நிற்கையில், கேட்டில் கார் ஒன்று நுழைந்தது.

வெள்ளை நிறத்தைக் கொண்டு அது ஆனந்தின் வண்டி என்பதை ஊகிக்க முடிய, அவர்களை சேர்ந்து பார்க்க விருப்பமின்றி, இருந்த இடத்திலேயே நின்றான்.

ஐந்து நிமிஷங்களில் மெல்லிய பேச்சு, சிரிப்பைத் தொடர்ந்து கார் கிளம்பிப் போக, மனோகர் மெதுவாக கூடத்துக்குள் வந்தான்.

படி ஏறி ஹாலில் நுழைந்த நிர்மலா, இவனைக் கண்டதும் நின்றாள்.

கலைந்திருந்த தலைமுடி....

கண்களடியில் லேசாய் கரு வளையங்கள்...

விரல்களில் புகையும் சிகரெட்....

சின்னப் பெண்ணைப்போலக் காட்சியளிக்கவேண்டும் என்ற ஆசையில், சரியாகச் சாப்பிடாமல் வேண்டுமென்றே இளைக்கவைத்துக்கொண்ட உடம்பு...

"எனக்கு உன்கிட்ட பேசணும், நிம்மி.."

அவள் தலையைச் சாய்த்து, உதட்டை ஒரு பக்கமாய்ச் சுழித்துச் சிரித்தாள்.

"எனக்குக்கூட உங்ககிட்ட பேசணும், மனோ."

"உட்காரு."

உட்கார்ந்தாள்.

யோசித்து வைத்திருந்த வார்த்தைகளை உபயோகித்து மனோகர் மெதுவாகப் பேசினான்.

"நம்ம ரெண்டு பேருக்காவும் இல்லாட்டிப்போனாலும் சுதாவோட நன்மைக்காகவாவது நாம மனசுவிட்டுப் பேசறது நல்லதுனு தோணுது, நிம்மா."

"ம்."

"இன்னிக்கு தூங்கப் போறத்துக்கு முன்னால சுதா ரொம்ப அழுது அமர்க்களப்படுத்திட்டா... என்னனு விசாரிச்சேன்... அவ ஃப்ரெண்ட்ஸ் எல்லாருக்கும் அம்மாவோ, அப்பாவோ தினமும் பெட் டைம் ஸ்டோரி சொல்றாங்களாம். தனக்கும் சொல்லணும்னு ஒரே அழுகை!"

நிர்மலா அசிரத்தையுடன் காலை ஆட்டிக்கொண்டு பேசினாள்.

"சொல்றதுதானே? நீங்கதான் வீட்டுலே இருந்தீங்களே!"

"நி...ம்மா!"

"கத்தாதீங்க மனோ! அம்மாவோ, அப்பாவோ கதை சொல்றாங்கனு சொன்னீங்களேனு கேட்டேன். அம்மாதான் சொல்லணும்னு இல்லியே— அப்பாவும் சொல்லலாம் இல்லே!"

மனோகர் அவள் பக்கத்தில் வந்து அமர்ந்தான்.

"சில மாசங்களாவே நாம ரெண்டு பேரும் ஒருத்தரை விட்டு ஒருத்தர் விலகிப் போயிட்டிருக்கோம்னு நா நினைக்கிறேன், நிம்மா! திஸ் ஈஸ் நாட் குட்! முக்கியமா சுதாக்கு நல்லதே இல்லே... அவளுக்கு அஞ்சு வயசு பூர்த்தி ஆயிடிச்சி."

நிர்மலா முகத்தைக் கேலியாக வைத்துக்கொண்டு சிரித்தாள்.

"என்ன இன்னிக்கு ரொம்பத்தான் பெண்ணைப்பத்தி கவலைப்படறீங்க! ஆச்சரியமா இருக்கே!"

அவளுடைய கிண்டல் கிளப்பிய எரிச்சலை அடக்க மனோகர் சிகரெட்டைப் பற்றவைத்து புகையை இழுத்தான்.

“இன்னிக்குனு இல்லே, நிம்மா... கொஞ்ச நாளாவே எனக்குள்ள இந்த அக்கறை தோணிடுச்சுதான்! சுதா வளர்ந்துகிட்டுவரா. அப்பா, அம்மா வோட எப்பவும் இருக்கணும், தன்னை அவங்க கிட்ட இருந்து கவனிக்கணும்னு அவ ஆசைப்படறது நியாயமானதுதான். ஆஸ் ஹர் பேரண்ட்ஸ், நாம இதைப் புரிஞ்சிகிட்டு அனுசரிச்சுதான் போகணும்.”

நிர்மலா கைவிரல் நகங்களை ஆராய்ந்தாள். தலையை நிமிர்த்தாமல் பேசினாள்.

“திடும்னு வந்திட்ட பெண் ஞாபகத்துக்காக, நீங்க வேணா லைஃப்பை மாத்திக்கிடுங்க... ஐ ஹேவ் நோ அப்ஜெக்ஷன். ஆனா, என்னால எதுவும் முடியாது... இன்ஃபாக்ட் நாம வாழறது ரொம்பப் போலியான வாழ்க்கை, இதைத் தொடர்ந்து வாழணுமானே நா யோசிச்சிட்டிருக்கேன்.”

“நிம்மா, என் மேலே உனக்கு ஆயிரம் கோபம் இருக்கலாம்... அதுக்காக இப்படி வாய்க்கு வந்ததைப் பேசாதே; நல்லா இல்லே!”

நிர்மலா முகத்தைத் தீவிரமாக வைத்துக்கொண்டு, அவனை ஏறிட்டு வெறித்தாள்.

“வாய்க்கு வந்தது இல்லே, மனோ, ஸீரியஸாதான் சொல்றேன். சில மாசங்களாவே என் நடவடிக்கைகள் உங்களுக்குப் பிடிக்கலை. என்னைப் புரிஞ்சிக்காம நீங்க பேசறது, ஏன் அடிக்கிறதுகூடத்தான்—எனக்குப் பிடிக்கலை. சரிப்பட்டு வராத ஜோடியா நாம தொடர்ந்து வாழறதுல அர்த்தம் இருக்கிறதா எனக்குத் தோணலை! இனியும் வேஷம் போடவும் நா விரும்பலை... உங்க வாழ்க்கை உங்களுக்கு, என் லைஃப் எனக்கு, ஓகே?”

சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டு, மனோகர் அதிர்ந்து நிற்பதைப் பொருட்படுத்தாமல் எழுந்து தன் அறைக்குச் சென்று, நிர்மலா கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

**ம**றுநாள் மனோகர் ஆபீஸ் செல்லும் வரையில் வெளியில் வராது இருந்தவள், அவன் போன பிறகு பெட்டிகளில் தன் உடைமைகளை எடுத்து அடுக்கினாள்.

ஒரு பேப்பரில், "நேற்றே சொல்ல வேண்டியவற்றைக் கூறிவிட்டேன். என்னை நன்றாகப் புரிந்துகொண்டவரோடு— ஏன், பெயரைச் சொல்வதில் எனக்கொன்றும் தயக்கமோ, வெட்கமோ இல்லை— ஆனந்தோடுதான்— நான் புது வாழ்க்கை வாழச் செல்கிறேன். துரத்திக்கொண்டு வந்து தொந்தரவு செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறேன் — குட்பை, நிர்மலா—" என்று எழுதி, கவரில் போட்டு ஒட்டி ஆயாவிடம் கொடுத்து, "ஆபீஸ்லேந்து ஐயா வந்ததும் கொடுத்திடு" என்றாள்.

பத்து மாசம் சுமந்து பெற்ற பெண்ணை நிரந்தரமாய்ப் பிரிகிறோமே என்ற கலக்கம் கடுகத்தனைகூட இல்லாமல், பம்பாய்க்கு ட்ரான்ஸ்ஃபர் ஆகி அன்று புறப்பட்டுக் கொண்டிருந்த ஆனந்தின் அழைப்பை ஏற்று, அவனுக்கு மனைவியாக வாழ, தன் உடைமைகளுடன் அவனைத் தேடிச் சென்றாள்.

## 5

அறை ரொம்ப நிசப்தமாய் இருந்தது.

கடிகாரத்தின் பெண்டுலம் அசையும் சப்தம் மட்டும் பெரிசாக ஒலித்து, அந்த மௌனத்தைக் கலைக்க முயன்று கொண்டிருந்தது.

பத்திரிகைகளும், தலைகாணிகளும் படுக்கையில் வாரி இறைந்திருந்தன.

சிகரெட் துண்டங்கள் ஆஷ்ட்ரேயை நிறைத்துவிட்டு, டீபாய் மேலும், தரையிலும் சிதறிக் கிடந்தன.

புகை மூட்டம்.

வெளிக்காற்று உள்ளே வர வழியில்லாததால், அறை நாறியது.

எதையும் கவனிக்கும் நிலையில் மனோகர் இல்லை.

குளிக்காமல், சாப்பிடாமல், நினைத்தபோது ட்ரிங்கும் சிகரெட்டுமாய் முக்கால்வாசிப் பொழுதைத் தள்ளியதில், அவன் வெகுவாகப் பலவீனமடைந்திருந்தான்.

தான் ஆண் என்பதை மறந்து அடிக்கடி அழுதிருந்ததில், கண்கள் சிவந்து, இமைகளை மூட முடியாமல் எரிந்தன.

மண்டைக்குள் வண்டு ஒன்றின் ரீங்காரம்.

நிம்மா.. நிம்மி.. நிர்மலா...

என்னை வேண்டாம் என்று உதறித்தள்ளிவிட்டுப் போய்விட்டாயே!

இனி நான் என்ன செய்வேன்?

எவ்வாறு வெளிஉலகத்தில் நடமாடுவேன்?

நண்பர்களை எப்படி நிமிர்ந்து பார்ப்பேன்?

அலுவலகத்திற்கு கூனிக்குறுகாமல் சென்றுவருவது எங்ஙனம் சாத்தியமாகும்?

ஐயோ— நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன்?

சென்ற ஜென்மத்தில் செய்த பாவம்தான் என்ன?

தலை தூக்க முடியாமல் இப்படியோரு இடி என்னை வீழ்த்திவிட்டதே...

என்ன செய்வேன்?

எங்கு செல்வேன்?

வலிக்கிறதே... இருதயம் குடைகிறதே...

என்ன செய்து இந்த வலியைக் குறைப்பேன்?

மனோகர் புலம்பினான், வாய்விட்டு அழுதான், முட்டிக்கொண்டு பரிதவித்தான்.

நிர்மலாவின் கடிதத்தைப் பார்த்துவிட்டு, நாலாக ஒடிந்துபோய் படுக்கையில் சாய்ந்தவன், நாட்கள் நாலாகப் போகின்றன. இன்னும் தெளியவில்லை.!

அறைக்குள்ளேயே முடங்கிக்கொண்டான். போனில் பேச மறுத்தான். நண்பர்களைச் சந்திக்க மாட்டேன்

என்றான். சாப்பாட்டைத் தவிர்த்தான். தூக்கம் வராமல், இருப்புக்கொள்ளாமல், என்ன செய்வது என்று புரியாமல் ஹா ஹா என்று தனக்குத்தானே தவித்துப் பறந்தான்.

இன்று நாலாவது நாள்...

நீயும் வேண்டாம், உன் உறவும் வேண்டாம் என்று நிர்மலா அவனை விட்டுப் போய் இன்று நாலாவது நாள்.

படுக்கை கொள்ளாமல் மனோகர் எழுந்து உட்கார்ந்தான்.

காலியாய் இருந்த வயிறு என்னமோ செய்தது... ஒரு பக்கம் புரட்டியது. இன்னொரு பக்கம் கொரக்களி வாங்கி தசைகளைச் சுண்டி இழுத்தது.

தலை கனமாய்க் கனத்தது.

கழுத்தில் நிற்கமாட்டேன் என்று அடம் பண்ணியதைத் தாங்கிக்கொள்வது போல கைகளால் அழுந்தப் பிடித்தான்.

மூச்சு அடைக்கிற மாதிரி இருந்தது.

இருட்டில் பார்வையை வீசினபோது எதுவும் புரியாமல் கண்கள் மசமசத்தன.

பிரயத்தனப்பட்டு, விளக்கின் ஸ்விட்சைத் தேடிப் போட்டான்.

திடுமென எழுந்த வெளிச்சத்தில் கண்கள் கூசி, எரிந்தன.

போர்வையை உதறித் தள்ளிவிட்டு, மெதுவாக பாத்ரூமுக்குச் சென்றான்.

ஊசியாய்க் குத்தின நீரின் ஜில்லிப்பைப் பொறுத்துக் கொண்டு, முகத்திலும், பின்கழுத்திலும் வாரியிறைத்துக் கொண்டான்.

அரை நிமிஷத்தில், மண்டையின் பாரம் கொஞ்சம் குறைந்த மாதிரி இருந்தது.

முகத்தைத் துடைத்துக்கொண்டு கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்தான்.

மடையா—எதற்காக உன்னை வருத்திக்கொள்கிறாய்— என்று அது கேட்கிற மாதிரி தோன்றியது.

பேஸின் மேல் சாய்ந்து, கண்ணாடிக்குச் சமீபத்தில் சென்று உற்றுப்பார்த்தான்.

மீண்டும் பிம்பம்—யூ ஆர் எ ஃபூல் மனோ... என்றே சொன்னது.

அவளை மகாராணி மாதிரி நீ வைத்துக்கொண்டாலும், உன் அருமை புரியாமல் ஓடிவிட்டாள்... கழுதை, போகட்டும் என்று விட்டு உதறாமல், எதற்காக உன்னை வேதனைப் படுத்திக்கொள்கிறாய்?

மனோகர், கலைந்திருந்த தலையை விரல்களால் கோதிக் கொண்டு வெளியில் வந்தான்.

இருண்டு கிடந்த கூடத்தைத் தாண்டி டைனிங் ஹாலுக்குச் சென்று விளக்கை ஏற்றினான்.

ஃப்ரிஜ் கதவைத் திறந்து, என்ன இருக்கிறது என்று பார்த்தான்.

ரொட்டி, முட்டை, வாழைப்பழம், பால்.

ஒரு வாழைப் பழத்தை எடுத்து, உரித்து, உள்ளே போக மாட்டேன் என்று தகராறு பண்ணப்பண்ண, பிடிவாதமாய் மென்று விழுங்கினான்.

ஸைட் போர்டிலிருந்து க்ளாஸ் எடுத்து பாலை ஊற்றிக் கொண்டு நிதானமாய்க் குடித்தான்.

கொஞ்சம் உணவு போனதும், வயிற்றின் சங்கடம் ஒரளவுக்குக் குறைவது புரிய, சரியான காரியம்தான் செய்தோம் என்கிற திருப்தியுடன் கூடத்துக்கு வந்தான்.

ஒரு உந்துதலின் காரணமாய், தன் அறைக்குச் செல்லாமல் மகள் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தான்.

நீல விடிவிளக்கின் ஒளியில், கட்டிலில் சுதாவும் தரையில் ஆயாவும் படுத்திருப்பது தெளிவாகத் தெரிந்தது.

சப்தம் செய்யாமல் மகளின் படுக்கையில் உட்கார்ந்து அவளை வெறித்தான்.

சாயலில் சுதா அப்பபடியே அவன்தான். நிர்மலாவின் ஜாடை கொஞ்சம்கூடக் கிடையாது. நிறம் வேண்டுமானால் அம்மா மாதிரி என்று சொல்லலாம்; அவ்வளவுதான்.

கண் சிமிட்டாமல் பெண்ணைப் பார்க்கையில்—ஐந்து வயசுக் குழந்தைக்குத்தான் இந்த வயசுக்குள் எத்தனை ஏமாற்றங்கள் என்ற வருத்தம் எழுந்தது.

முதலில் குழந்தை வேண்டாம் என்று தான் சொன்னதை நிர்மலா கேட்டிருந்தால், இவள் பிறந்திருக்க மாட்டாளே—இந்த வேதனையெல்லாம் அனுபவிக்காமல் தப்பித்திருப்பாளே— என்ற எண்ணம் தோன்ற, 'நக்' கென்று உள்ளுக்குள் ஒரு கோபக் குமிழ் வெடித்தது.

நிர்மலா ப்ளடி பிச்...

எத்தனை கல்நெஞ்சக்காரி நீ!

உனக்கு இங்கு என்னிடம் என்ன குறை?

பணம், சுதந்திரம், அந்தஸ்து—என்று எதில் குறை?

ம்ஹூம்... ஒன்றிலும் இல்லை.

தலைக்கு மேல் வைத்துக்கொண்டு கூத்தாடினதில், என் அருமை புரியாமல் ஓடிவிட்டாயா?

அளவுக்கு மீறி இடம் கொடுத்ததில், உன் வரம்பு எது என்று புரிகிற நிதானம் இல்லாமல், வழிதவறிப்போய் விட்டாயா?

ஓடு, ஒழி.. ஒழிந்து போ!

அத்தனையும் உனக்கு நான் கொடுத்திருந்த இடத்தால் வந்த வினை.

எஸ்—ஒன்றுமே தெரியாத அப்பாவியாக இருந்தவள், இப்படி அத்துமீறி நடந்துகொள்ள, நான் ஏகத்துக்குக் கொண்டாடியது, இடம் கொடுத்ததும்கூட காரணங்கள்தானே!

வேண்டாம் என்று ஒதுங்கியவளை வலுக்கட்டாயமாக நாகரிக மோகத்தில் தள்ளி, இன்று அவள் என்னை, என் மகளை விட்டுப் பிரிய நானே வழி வகுத்துவிட்டது உண்மைதானே!

கடவுளே!

நாகரிக மோகம்...

இதுதானே என்னையும் ஆட்டிப்படைத்து, நிர்மலா கண்ணையும் கட்டிவிட்டது!

எஸ்... எஸ்... எஸ்...

நாகரிகமான வாழ்க்கை வாழ ஆசைப்பட்டதுதான் இந்த அசிங்கம் நடப்பதற்கு விதையாக இருந்தது!

எங்கள் வாழ்க்கை, இன்று இப்படிக் கோணிப்போக, அன்று நான் விரும்பிய நாகரிக மோகம்தான் அஸ்திவாரமாக அமைந்துவிட்டது.

நாகரிக வாழ்க்கையை நான் வெறுக்கிறேன்.

நாகரிக மனிதர்களை நான் வெறுக்கிறேன்.

என் வாழ்க்கை சீரழிய ஒரே காரணமாய் இருந்த நாகரிக வெறியை நான் வெறுக்கிறேன்.

டாம் தட் சோஷியல் லைஃப்!

என்னவோ புரிந்துவிட்ட தினுசில் ஓங்கி நெற்றியில் அடித்துக்கொண்டபோது, கைவிரல்கள் நடுங்கின.

உடம்பு பூராவும் வியர்த்தது.

'ம்மா..ஆ...' என முனகலுடன் சுதா புரண்டு படுத்தாள்.

அனாதை போல் யாரும் இல்லாமல் மகள் படுத்திருப்பது மனதைக் கஷ்டப்படுத்த, இது நாட்கள் இல்லாத விதமாய், 'இனி எனக்கு இவள்தானே எல்லாம்... இவள் உருவாக நானும் அல்லவோ காரணம்? அம்மா விட்டு ஓடின மாதிரி பொறுப்பில்லாமல் நானும் நடந்துகொண்டால் இந்தப் பிஞ்சின் நிலை என்ன?' என்ற கேள்விகள் நெஞ்சைப் பிறாண்ட, கண்களில் நீர் திரண்டது.

நிர்மலா போய்விட்டால் என்ன?

நான்—பெற்றவன்—இருக்கிறேன், இவளை அனாதையாய் விடமாட்டேன்.

அந்த நாகரிக ஆசையில் நிர்மலாவைப் பாழாக்கின மாதிரி இவளை வீணாக்க மாட்டேன்.

கண்டிப்புடன், கட்டுப்பாட்டுடன், அந்தக்கால வழக்கப் படி வளர்ந்து, சுதாவை சிறந்த விதத்தில் ஆளாக்குவேன்.

நான் என்னையறியாமல் செய்துவிட்ட பாவத்திற்கு இவளை ஒழுக்கத்தோடு வளர்ப்பதுதான் பிராயச்சித்தம்.

செய்வேன்... கண்டிப்பாய், சத்தியமாய், செய்து காட்டுவேன்.

மனோகர் குனிந்து மகள் நெற்றியில் முத்தமிட்டான். நகர்ந்திருந்த அவள் போர்வையைச் சரிசெய்தான்.

ஓசைப்படாமல் எழுந்து தன் அறைக்கு வந்தான்.

மேஜை முன் உட்கார்ந்து, செய்யவேண்டியவை என்னென்ன என்று யோசித்துக் குறித்துக்கொண்டான்.

இனி இந்த ஊரில், தெரிந்தவர் நடுவில் இருப்பதென்பது இயலாத காரியம்.

நண்பர்களைப் பார்க்கையில், இங்கு அங்கு போகையில், நிர்மலா பற்றின பேச்சு, ஞாபகம் கட்டாயம் எழும்.

நோ... எனக்கு அவள் நினைவு வேண்டாம். அவளைப் பற்றின எந்தப் பேச்சுமே வேண்டாம்.

முதல் காரியமாய் இந்த ஊரை விட்டுப் போவதுதான் சரி.

எங்கே போகலாம்?

என் வேலை என்னாகும்?

வேலையை விட்டுவிட்டால், கையில் என்ன கிடைக்கும் என்பதை, தோராயமாக கணக்குப்போட்டுப்பார்த்தான்.

ம்ம்.. நாட் பேட்... கணிசமாகத்தான் வந்தது.

சரி... வேலையை விட்டுவிடலாம்.

அடுத்தது?

சற்று முன் தீர்மானித்தபடி பெண்ணைக் கட்டுப்பாடுடன் வளர்க்கவேண்டுமென்றால், அதற்குப் பெரிய நாகரிகப் பட்டணங்கள் தேவை இல்லை.

தெற்கில், சின்ன ஊராகப் பார்த்துக்கொண்டு போய் விட்டால்?

திருச்சி, மதுரைப் பக்கம் எனக்கு வேலை வாய்ப்புகள் அதிகம்.

அம்மாவோடு கிராமத்தில் கொஞ்ச நாட்கள் தங்கிவிட்டு எங்கு செட்டில் ஆவது என்று மெதுவாக யோசித்துக் கொண்டால்?

மனசில் நிர்மலா உண்டாக்கிவிட்ட ரணத்தின் வலி தாங்கமாட்டாமல் இருக்க, கண்ணைக் கட்டிவிட்ட குதிரை யாய், தன் காயத்துக்கு முதலில் மருந்து போடுவதிலேயே குறியாக இருந்த மனோகர், வேறு எதைப் பற்றியும் சிந்திக்க மறுத்தவனாக காரியத்தில் உடனடியாய் இறங்கினான்.

மறுநாளே அலுவலகத்திற்குச் சென்று தன் ராஜினாமா வைச் சமர்ப்பித்தான்.

'எனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கணக்குப்போட்டு என் ஊர் விலாசத்திற்கு அனுப்பிவிடுங்கள்' என்று கடிதத்தையும் தந்துவிட்டு, 'இரண்டு மாசம் லீவு எடுத்துக் கொண்டு, ஆற அமர யோசனை செய், மனோகர்' என்று எம்.டி. கரிசனத்துடன் கூறியதைக் காதில் வாங்காமல் பிடிவாதமாய், தான் நினைத்ததையே தொடர்ந்து செய்தான்.

மகளுக்கும் தனக்கும் தேவையான உடைகளை மட்டும் வைத்துக்கொண்டு, நிர்மலா சம்பந்தப்பட்ட எதுவுமே தன் எதிர்காலத்துக்கு வேண்டாம் என்பது போல, பர்னிச்சர்கள், பாத்திரங்கள், அலங்காரப் பொருட்கள் என்று ஒன்று விடாமல் அத்தனையும் ஒரு ஏலக் கடைக்காரரிடம் ஒட்டு மொத்தமாகக் கொடுத்து 'என்ன விலை வருதோ வித்திட்டு உங்க கமிஷன் போக பாக்கிய இந்த அட்ரஸுக்கு அனுப்பிடுங்க' என்று பணித்தான்.

நாலுமாச சம்பளத்தை ஆயா கையில் கொடுத்து கணக்குத் தீர்த்து அனுப்பினான்.

"உன் பேத்தியும் நானும், வருகிற வெள்ளிக்கிழமை அங்கு வருகிறோம்." என்று அம்மாவுக்குத் தந்தி கொடுத்துவிட்டு, எதுவும் புரியாமல் விழித்துக்கொண்டிருந்த மகளுடனும் சொற்ப உடைகளுடனும் காரில் ஏறி, இனி இந்த பெங்களூர் சகவாசமோ, நாகரிக வாழ்க்கையின் தொடர்போ வேண்டவே வேண்டாம் என்ற வைராக்கியத்துடன் ஊரைப் பார்க்க புறப்பட்டான்.

## 6

ருக்மணிக்கு அப்படி ஒன்றும் வயசாகிவிடவில்லை. இன்றைக்கெல்லாம் இருந்தால் ஐம்பத்தாறு ஐம்பத்தி ஏழு வயசுதான் இருக்கும்.

இருபத்தி ஐந்தாவது வயசில், தாலிகட்டினவர் அகாலமாய் இறந்துபோக, அந்த இளம் பிராயத்திலேயே விதவைக் கோலத்தைப் பூண்டதாலோ என்னமோ, உடம்பாலும் மனசாலும் அவள் சீக்கிரமே கிழவியாகிப்போனது தான் நிஜம்.

தலை முடி வெளுத்து, லேசாகக் கூன் விழுந்து, தோல், சுருங்கி இருப்பவளைப் பார்த்தால், அறுபதுக்கு மேலேயே மதிக்கத் தோன்றும், நிச்சயமாய்.

ருக்மணிக்குப் பிறந்ததே மனோகர் ஒருவன்தான். ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று செல்லமாய் வளர்த்ததில், அவன் 'படிக்கிறேன், மேலேமேலே படித்து பெரிய உத்தியோகத்துக்குப் போகிறேன்' — என்று பிடிவாதம் பிடித்தபோது, 'என்னை ஒண்டியாய்த் தவிக்க விட்டுட்டு அப்படி என்னய்யா படிப்பு? இருக்கிற சொத்து போதும்; பெற்றவளுக்கு அடங்கி ஊரோடு வாழ்' என்று அதட்டிச் சொல்லக்கூட தைரியம் இல்லாமல்போய்விட்டது.

மனோகர் மதுரையில் பள்ளிப் படிப்பும், சென்னையில் இன்ஜினீயரிங் படிப்பும் படித்தான். அப்புறம் ஜம்ஷெட்பூரில் எம்.பி.ஏ. படித்தான். படிப்பிலும், வேலை நுட்பத்திலும் கெட்டிக்காரனாக இருக்க, பெங்களூரில் பெரிய வேலை தானே தேடிவர, மகனின் ஆடம்பர நாகரிக வாழ்க்கை தனக்கு சரிப்பட்டுவராது என்பதை உணர்ந்து ருக்மணி, 'சொந்த மண்ணை விட்டுட்டு நா வரலைய்யா' என்ற சாக்கை சொல்லி ஊரோடு புத்திசாலித்தனமாய்த் தங்கிக் கொண்டாள்.

வருஷத்துக்கு ஒரு தரம்—முடிந்தால் ஒரு நாளோ, அரை நாளோ மனோகர் வந்து, பெற்றவளை எட்டிப்பார்த்துவிட்டுப் போவான்.

மற்றபடி ஆடிக்கொன்றுமாய், அமாவாசைக்கு ஒன்றுமாய் இரண்டு வரி கடிதம் வரும்.... அவ்வளவுதான்.

தனியாய் மகன் இஷ்டத்துக்கு வாழ்ந்தபோதே வாயைத் திறந்து 'இது தப்புப்பா' என்று சொல்லத் தெரியாத ருக்குமணியா, அவன் மனத்துக்கு பிடித்தவளை மணந்து கொண்டு வாழ்ந்த வாழ்க்கையில் குற்றம் குறையைக் கண்டு, 'இது தவறு, தம்பி' என்று துணிந்து கண்டித்திருக்கப் போகிறாள்?

ம்ஹூம், இல்லை.

தோளுக்கு மேல் வளர்ந்தவன், படித்தவன், உலகம் தெரிந்தவன், முக்கியமாய் காசு பணத்தோடு அந்தஸ்தாய் வாழ்பவன்—இவனுக்கா நாம் சொல்லி எதுவும் தெரிய வேண்டும்? — என்ற எண்ணத்துடன் அவன் வாழ்விலிருந்து ஒதுங்கித்தான் இருந்தாள்.

பிள்ளையைக் காண வேண்டும் என்ற ஏக்கம் தாங்க மாட்டாதுபோனால் மட்டும், ரயில் பிடித்து பெங்களூர் போவாள்... இரண்டு நாள் தங்குவாள். முடிந்தவரையில் பட்டும் படாமல் இருந்துவிட்டு, பிள்ளைக்கோ, மருமகளுக்கோ தன்னால் துளி கஷ்டம் என்ற பேச்சு எழாமல் வந்து விடுவாள்.

அப்படிப்பட்டவள், பிள்ளையிடமிருந்து தந்தி என்றதும் தவித்துப்போனதில் வியப்பு என்ன?

தந்தியா?

மனோகரிடமிருந்தா?

என்ன?

பிரித்து தந்தி சேவகரையே படிக்கச் சொல்வதற்குள் படபடவென்று வந்தது.

'நானும் சுதாவும் வெள்ளிக்கிழமை அங்கு வருகிறோம்.'

சேதி அறிந்து ருக்மணி ஏகத்துக்கு சந்தோஷித்தாலும், மனைவியை விட்டுவிட்டு ஏன் இப்போது திடுதிப்பென்று பிள்ளை வருகிறான் என்ற கேள்வி மாத்திரம் வயிற்றை விடாமல் கலக்கிக்கொண்டேயிருந்தது.

தந்தி கிடைத்து, பிள்ளை வருவதற்கு இடையில் இருந்த இரண்டு நாட்களில், ஆள் வைத்து வீட்டைச் சுத்தம் பண்ணினாள்; மாவு இடித்து பேத்திக்கு பலகாரங்களைச் செய்தாள்.

வெள்ளிக்கிழமை காலையிலிருந்தே குட்டி போட்ட பூனை மாதிரி வாசலுக்கும் உள்ளுக்கும் நடையாய் நடந்தாள்.

மாலை மங்கி இருள் சூழ்ந்து எட்டு மணி சுமாருக்கு, காரின்மீது புழுதிப் போர்வை போர்த்தியிருக்க, மனோகர் பெண்ணுடன் வந்து இறங்கினான்.

'வாய்யா தம்பி' என்று வரவேற்ற ருக்மணிக்குள் காரணமில்லாமல் பயம் வேகமாய் வியாபித்தது.

பிள்ளை ஏன் எப்படியோ இருக்கிறான்?

உடம்பு நன்றாக இல்லையா?

மருமகளுக்கு ஏதாவது உடல் கோளாறா?

பேத்திக் குட்டியும் இளைத்துப்போய், சோனியாய், தெம்பாகவே இல்லையே!

"நிர்மலா வரலியா, தம்பி?" என்றதும், "இல்லை— விவரம் அப்புறம் சொல்கிறேன்" என்று மனோகர் தாழ்ந்த குரலில் பதில் சொல்ல, அவள் சங்கடம் அதிகமானது.

என்ன விஷயம்?

**அ**வள் பயந்தது வீணாகாமல், அன்றிரவு சாப்பாடு ஆகி சுதா தூங்கினபின், மாடி அறையில் உட்கார்ந்து, சிகரெட்டைப் பிடித்துக்கொண்டு மோட்டுவளையை வெறித்தபடி மனோகர் பூரா விவரத்தையும் அவளிடம் சொல்ல, சப்தம் எழாமல் மார்பில் அடித்துக்கொண்டு ருக்மணி பதறினாள்.

"என்ன, என்னய்யா சொல்றே? நிர்மலா உன்னோட இருக்கப் பிடிக்கலைனு இன்னொருத்தனோட ஓடிட்டாளா? அட, கூறுகெட்ட மூதேவி, ஓடுகாலி முண்டம்! என் பிள்ளையைவிட உனக்கு இன்னொருத்தன் உசத்தியா போயிட்டானா? அய்யோ! அய்யோ! முருகா! நா என்ன பண்ணுவேன்? எங்கே போய் முட்டிப்பேன்? குடும்ப கௌரவத்தைக் காத்துல விட்டுட்டு ஓடிட்டாளே சிறுக்கி! அய்யோ, நா பெத்த மவனே, உனக்கு என்னய்யா குறை? ராஜா மாதிரி இருக்கே... கை நிறைய சம்பளம்... அவளை ராணி மாதிரி ஒருத்தர் ஒரு சொல் பேசாம வெச்சிருந்தே! நா என்ன பண்ணுவேன் ஊர் மொகத்தில் எப்படி முழிப்பேன்? அய்யோ! அய்யோ!"

தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு தாய் அழுதது கண்களைக் கலங்கவைக்க, மனோகர் தலைகுனிந்து உட்கார்ந்தான்.

"ஏன்ய்யா, இந்த அக்கிரமம் எப்படி நடந்திச்சு? என்ன ஆச்சு? ஏன் அவ புத்திகெட்டுப்போயிட்டா? விவரமா சொல்லுய்யா, என்னால் நம்ப முடியலையே! நீ தலை குனிஞ்சி உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்தா கண்றாவியா இருக்குதேய்யா! நா என்ன பண்ணுவேன்? உங்கப்பா போனப்பவே நானும் போயிருக்கக் கூடாதா? கல்லுகுண்டு மாதிரி இருந்துகிட்டு அத்தனையும் கேட்டிட்டும் பார்த்திட்டும் இருக்கேனே!"

சில நிமிஷங்களுக்கு எதுவும் பதில் சொல்லாமல் அவளை மனோகர் அழவிட்டான். பின் நிதானமாய்ப் பேசினான். "இப்ப நீங்க இப்படிப் புலம்பி அழுவறதால ஆகப்போறது ஒண்ணுமில்லேம்மா... போனவளுக்காக நாம கண்ணீர் விட்டு அழறதுகூட வேஸ்ட்தான்! அந்த அளவுக்கு அவ ஈவு இரக்கம் இல்லாதவ, சுயநலம் படைச்சவ! அவளுக்கு நா என்ன குறை வெச்சேன்னு சத்தியமா எனக்குப் புரியலை! போயிட்டா... விடுங்க! இதோட அவளைப் பத்தின பேச்சை நாம அடியோட விட்டுடணும்... ஊராருகிட்ட அவ செத்துட்டானுகூட நீங்க சொல்லிக்கங்க, எனக்குக் கவலை இல்லே! ஆனா அவ ஏன் போனா, எவனோட போனான்ற விவரமெல்லாம் திரும்பத்திரும்பக் கேட்டு என்னை இன்னும் வேதனைப்படுத்தாதீங்க... ஒருதரம் அத்தனையும் நா சொன்னது போதும்... புரிஞ்சிக்கங்க."

"இல்லைய்யா, பேசலை. அந்த தடிச்செறுக்கிபத்தி பேசவேயில்லை! உன்னை மதிக்காத அந்த நாயி, பெத்த புள்ளைய நினைச்சிப்பார்க்காத மூதேவி, இனிமே இருந்தா என்ன, செத்தா என்ன? ஒழியட்டும், ஒழுக்கங்கெட்ட நாயி!"

தனக்குத்தானே புலம்பிக்கொண்ட ருக்மணி ஏதோ நினைப்புக்கு வந்தவளாய் நிமிர்ந்து சொன்னாள்.

"இவ ஒழுங்கா உன்னோட குடித்தனம் பண்ணுவாளானு எனக்கு சந்தேகம் இருந்திச்சி, தம்பி... நா வந்துபோன ரெண்டு நாள்லியே பாத்திருக்கேனே—ஓயாம டெலிபோன் வரும்; ஆம்பிளைங்க வருவாங்க. சிரிச்சிச்சிரிச்சு பேசுவா... 'யாரும்மா?'ன்னா, 'ஸ்னேகிதங்க'ம்பா... உனக்கு இதெல்லாம் தெரியுமோ, தெரியாதோ? பொம்பளைக் கழுதைக்கு ஆம்பிளை தடியன்களா சினேகிதங்க? அந்தக் குடும்பம் உருப்படுமா? தலைமுடியை வெட்டிகிட்டு மார்புல துணி நிக்காம, என்ன ஆட்டம் போடுவா? தூங்கி எழுந்ததும் உதட்டுல சாயம் பூசிக்கணுமா, கை நகத்துக்கு அரை மணி நேரம் பாலீஷ் போடணுமா? அந்த ஆயா இருந்தாளோ, குழந்தை இந்தமட்டுக்குமாச்சும் வளர்ந்திச்சி! அத்தனையும் கண்டும் காணாம நா இருந்திட்டு, உன்னண்ட சொல்லவும் முடியாம, எதுவும் செய்யவும் தைரியம் இல்லாம,

வந்திடுவேன்... இப்ப இல்ல அவளோட தகிடுதத்தம் புரியுது! பேமானி... கூறு கெட்ட தேவடியா!"

அம்மா திட்டத்திட்ட மனோகர் வாய் திறக்காமல், அவள் அப்படி ஆண்களுடன் திரிய, முடியை வெட்டிக் கொண்டு ஆட நான்தான் தூண்டினேன் என்று கூறக்கூடத் தைரியமில்லாமல் அமர்ந்திருந்தான்.

"அவளைப் பெத்தவருக்கு சேதி தெரியுமா, தம்பி?"

மனோகர் தெரியாது என்று தலையசைத்தான்.

"ஒரு போன் பண்ணிச் சொல்றதுதானே? 'பார்த்துக்குங்க உங்க மக லட்சணத்தை'னு காட்டமா கேட்கறதுதானே?"

"கேட்டு என்னம்மா பிரயோஜனம்? போனவ வந்திடப் போறாளா?"

"அய்யோ, அந்த மூதேவி திரும்ப வரலைன்னு இங்க யார் அழுதாங்க? தான் பெண் வளர்த்த யோக்யதை அந்தப் பெரிய மனுஷனுக்குத் தெரியட்டுமேனுதான் கேட்டேன்."

"அவளுக்கு வேணும்னா அவளே சொல்லிக்கட்டும். இனிமே எனக்கும், அவங்களுக்கும் என்ன சம்பந்தம்?"

"அதுவும் சரிதான்! உனக்கென்ன, ஆம்பளை சிங்கம்... கட்டிக்க ரெடின்னா ஆயிரம் பேர் க்யூல நிக்க மாட்டாங்களா? நா பாத்து பண்ணிவைக்கிறேன் அருமையான பெண்ணா, நீ எதுக்கும் கவலைப்படாதே!"

மனோகர் வேதனையுடன் சிரித்தான்.

"ஆள் அவமானப்பட்டு நொந்துபோயிருக்கேன்... இந்தச் சமயம் பார்த்து இன்னொரு கல்யாணத்தைப்பத்தி பேசறிங்களேம்மா, இது உங்களுக்கே நல்லாயிருக்கா? ஒண்ணு சொல்றேன், கவனமா கேட்டுக்கங்க... பொம்பளை சகவாசத்தால நா பட்டபாடு போதும், அவளோட நா அனுபவிச்சதும் போதும்! இனி ஆயுசுக்கும் ஒண்டியாவே இருந்திடணும்ன்ற அளவுக்கு மனசு கசந்துபோச்சி! தெரிஞ்சோ தெரியாமலோ பெண்டாட்டிக்கு நிறைய எடம் கொடுத்து, நாகரிகமா இருக்கச் சொல்லி, அவ தப்புப் பண்ண நானும் காரணமா யிட்டேன். அந்தத் தப்புக்கு பிரதிபலனா, என் மகளை

கண்டிப்போட, ஒழுக்கத்தோட நல்லவிதமா வளர்த்து ஆளாக்க விரும்பறேன். இனிமே எனக்குனு இருக்கற ஆசை யெல்லாம் இது ஒண்ணுதான்! அதுக்காக, வேலைய விட்டுட்டு, சாமானெல்லாம வித்திட்டு இங்க வந்திருக்கேன். புது ஊர்ல, புது சூழ்நிலைல, புது மனுஷங்க தொடர்போட நானும் என் பெண்ணும் புது வாழ்க்கையைத் தொடங்க ணும்னு விரும்பறேன். உங்ககிட்ட எல்லாத்தையும் வெளிப் படையா சொல்லிட்டேன். ஒண்ணையும் மறைக்கலை. நீங்க என் மனசைப் புரிஞ்சிகிட்டு, இன்னொரு கல்யாணம் அது, இதுனு சொல்லாம என் வழிலே வந்து சுதாவ நல்ல விதமா வளர்க்க உதவினீங்கன்னா, நா சந்தோஷப்படுவேன்."

குரல் கம்ம மகன் பேசுவது சகிக்க முடியாது இருக்க, ருக்மணி, "வேதனைப்படாதேய்யா, நா உன் மனம் போல நடந்துக்கறேன். இத்தனை வருஷமா என்கிட்டயிருந்து எட்டி இருந்த பிள்ளை, இப்பவாச்சும் நெருங்கி வந்தியே, அது ஒண்ணே எனக்குப் போதும், தம்பி! நீ என்ன சொல்றியோ அப்படியே நடந்துக்கறேன். நீ கலங்காதய்யா..." என்று கெஞ்சலாய்ப் பேசினாள்.

"ஒரு மாசம் இங்க தங்கி, மதுரை, திருச்சி, கம்பனிங்களுக்கு வேலைக்கு எழுதிப்போடலாம்னு இருக்கேன். வேலை பண்ணாம வீட்டோட நிலத்தைப் பார்த்துகிட்டு இருக்கிறது எனக்கு சரிப்படாது. இந்தப் பக்கமா வேலை தேடிக்கிட்டா, நீங்க என்கூட வந்து இருக்க ஆட்சேபணை ஒண்ணும் இல்லியேம்மா?"

ருக்மணி தயங்கினாள்.

"ஒண்ணுமில்லே... ஆனா தம்பி, உன் பழக்கவழக்கம் எல்லாம்... வேற, நா அந்தக் காலத்து மனுஷி... சாமி, கோயில், சம்பிரதாயம்னு கர்நாடகமா ஏதாச்சும் செய்வேன், உனக்கு சங்கடமா இருக்கும். அதான்.."

பேசியவளை கை நீட்டி மனோகர் தடுத்தான்.

"அந்த மனோகர் இப்ப இல்லேம்மா. உங்க முன்னாடி நிக்கறவன் புது மனோகர். அவன் சம்பிரதாயம், கட்டுப்பாடு எல்லாத்தையும் நம்பிகிட்டுத்தான் புது வாழ்க்கை தொடங்கப்போறான். நீங்க வேணா பாருங்க, இன்னும் ஒரு

மாசத்தில் நா அடியோட மாறிடுவேன். குடிக்க மாட்டேன். சோஷியல் லைஃப் வேணும்னு சொல்லமாட்டேன். ஏன், இந்த சிகரெட்டைக்கூடத் தொட மாட்டேன்ம்மா! ஒரு தடவை பண்ண தப்பு போதும்... இனி, என் பெண்ணாச்சும் நல்லா இருக்கட்டும்."

அடுத்து வந்த நாட்களில், யாருமே வேண்டாம் என்று மனோகர் ஒதுங்கிக்கொண்டதில், ஊராரையும் உற்றாரையும் சமாளிப்பதற்குள் ருக்மணிதான் திண்டாடிப்போனாள்.

— மருமக வரலியா?

— அவ எங்கே?

என்று மாறிமாறி அனைவரும் கேட்டபோது, அவ அப்பா வீட்டுக்குப் போயிருக்கா, என்று முதலிலும், 'எப்ப வருவாளோ! அந்த குணம் கெட்டவ போக்கு யாருக்கு விளங்குது?' என்று பிறகும் சொல்லித் துளித்துளியாய் புரிய வைத்தாள்.

மேற்கொண்டு யாராவது துருவிக் கேட்க முனைந்தால், "அய்யோ, வம்பு எங்கே கிடைக்கும்னு அலையறியேடீ... அந்தக் கூறுகெட்ட கழுதை பேச்சை என்னண்ட பேசாதே!" என்று முகத்தில் அடித்த மாதிரி பேசி வாயை அடைத்தாள்.

ஆக, மனோகர், அவன் மனைவி நடுவில் என்னமோ கசமுசா இருக்கிறது, அவர்கள் சேர்ந்து வாழவில்லை என்பது எல்லோருக்கும் புரிந்ததே ஒழிய, மற்ற விவரங்கள் எதுவும் தெளிவாகவில்லை.

இதன் நடுவில் எக்கச்சக்கமான படிப்புத் தகுதிகளுடன் கூடிய தன் பயோடேட்டாவை மனோகர் இரண்டு தனியார் கம்பெனிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்ப, அவர்கள் இரு வருமே அவனை வேலைக்கு எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்க, திருச்சி வேலை நாலு விதத்திலும் உயர்வு என்று மனசுக்கும் பட, அந்த ஒன்றாம் தேதி முதலில் தான் மட்டும் போய் அங்கு ஏற்பாடுகளைச் செய்தபின், தாய், மகளுடன் சென்று, விரும்பிய வகையில் புது வாழ்க்கையைத் தொடங்கினான்.

## 7

அலாரம் அடிக்கத் துவங்கிய உடனே மனோகர் விழித்துக்கொண்டுவிட்டான்.

சத்தத்தை நிறுத்திவிட்டு குளியலறைக்குச் சென்று, பல் தேய்த்து குளித்தான்.

சுத்தமான வேட்டி, ஷர்டை அணிந்து ஈரத் தலையை வாரினான்.

கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தைப் பார்க்கையில் ‘குளிச்ச கையோட முருகனை நினைச்சி துளி விபூதிய பூசிக்கய்யா... நிம்மதி தன்னால் வரும்’ என்று நாலைந்து நாட்கள் முன் கரிசனத்துடன் அம்மா சொன்னது நினைவுக்கு வர, உறங்கிக்கொண்டிருந்தவர்களை எழுப்பாமல், பூஜை அறைக்குச் சென்றான். விபூதி வைத்திருக்கும் டப்பாவை விளக்கைப் போட்டு எடுத்து, ஆள்காட்டி விரலால் கொஞ்சம் எடுத்துப் பூசிக்கொண்டான்.

விளக்கை அணைத்து, வாசல் கதவைத் திறந்து வெளியில் வந்து, மீண்டும் கதவை இழுத்துச் சாத்தியபின் படிகளில் இறங்கி, தெருவில் வேகமாக நடந்தான்.

விடிகாலை ஐந்து மணி.

சாம்பல் போர்வை பூத்த வானம்.

வெங்கல ஜோதியாய் பளிச்சிட்ட ஒற்றை நட்சத்திரம்.

நாலாவது வீட்டு வாசலில் குரலெடுத்துக் கூவியது சேவல்.

மாடுகளை ஓட்டிக்கொண்டு வியாபாரத்தைக் கவனிக்க நடக்கும் பால்காரன்.

மாடுகளின் கழுத்து மணி ணங் டங் என்று குரல் கொடுத்து அந்தக் காலைப் போதுக்கு கட்டியம் கூறி வரவேற்கிற மாதிரி மனோகருக்குத் தோன்றியது.

கடைசி வீட்டு வாசலில் லட்சணமாய் கோலத்தைப் போட்டு, வாசல் விளக்கை மங்கலமாய் ஏற்றி, அதற்குள் வைத்திருந்தார்கள்.

காலை வீசிப்போட்டு நடக்கையில், உறக்கம் கலைந்து அழும் குழந்தையின் சிணுங்கல், சளப்சளப்பென்று வாசல் தெளிக்கும் ஓசை, ட்ருய்—ஹேய் ட்ருய் என்று நாக்கைச் சுழட்டி பால்காரன் எழுப்பும் த்வனி, சர்ரென்று சைக்கிளில் வேகமாய் பேப்பர்காரப் பையன் தாண்டும் சப்தம்—என்று நானாவித ஒலிகள் காதில் விழ, மூச்சை நீளமாக இழுத்து பார்வையைச் சுழட்டினபோது, நாளுக்கு நாள் தன் நிம்மதியும் சந்தோஷமும் கூடிவருவதை மனோகரால் உணர முடிந்தது.

திருச்சிக்கு வந்துவிட்ட இந்தச் சில மாதங்களில் தன் வாழ்க்கை வெகுவாக நிதானப்பட்டுவிட்டது அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

பெங்களூர் வாழ்க்கைக்கும் இதற்கும்தான் எத்தனை வித்தியாசம்!

உறங்கி எழுந்தால் ஆபீஸ், நண்பர்கள், பார்ட்டி என்று பொழுது பறந்துவிட, முக்கியமாய்ச் செய்ய வேண்டும் என்ற காரியத்தைக்கூடச் செய்ய முடியாமல் நாள் முடிந்துவிடும்.

ஆனால் இங்கு அப்படி இல்லை.

நேரத்துக்கு மனோகர் அடிமை இல்லை... அவனுக்குக் கட்டுப்பட்டு, பொழுது சுருட்டிக்கொண்டு கிடக்கிறது.

வேண்டாத பேச்சு வார்த்தைகள், சகவாசம், என்று எதுவும் இல்லாததால், அமைதியாக சிந்தித்து, தேவையான காரியங்களைச் செய்ய முடிகிறது.

முன்பெல்லாம் ஏழு மணிக்கு முன் அவன் எழுந்து விட்டால், அது அதிசயம்.

முதல் நாள் குடித்துவிட்டிருந்த ட்ரிங்க் தலையிலேயே தங்கி, எதையும் ஒழுங்காய்ச் செய்ய விடாமல் ஹேங் ஓவரைத் தந்திருக்கும் என்பதால், குளித்து, பேப்பர் படித்துத்

தயாராகி ஆபீஸுக்குக் கிளம்புவதற்குள், மணி எட்டரை என்று கடிகாரம் தெரிவிக்கும்.

அலுவலகத்தில் கொஞ்சம் வேலை. வேண்டாத பேச்சு நிறைய...

மாலையில் க்ளப் அல்லது நண்பர்கள் வீட்டில் குடி, மீண்டும் பேச்சு, இல்லை, வம்பு.

இதுதானே அவன் இத்தனை வருஷங்களாய் வாழ்ந்த வாழ்க்கை!

நின்று நிதானித்து தனக்கென்று ஒரு நிமிஷத்தை ஒதுக்கிக் கொள்ள முடியாதபடி, நாகரிகச் சுழலில் சிக்கி அந்த வேகத் துக்கு நீந்த முடியாமல் அதன் இஷ்டத்துக்கே இழுக்கப்பட்டுச் சென்றதுதானே உண்மை?

எத்தனை போலியான வாழ்க்கை!

அத்தனையும் வேஷம்.

அந்த நண்பர்கள், அந்தச் சூழ்நிலை, ஏன் அந்த மனைவி யும் அவளோடு வாழ்ந்து ஐந்து வருஷங்களும்கூடத்தான் போலியானவை, அசத்தியமானவை...

யார் செய்த புண்ணியமோ, அத்தனையும் ஒட்டு மொத்தமாய் ஒதுங்கிவிட்டன... பிடித்திருந்த கிரஹணம் விலகுகிற மாதிரி.

தன் நிம்மதியில்லாத அந்த நாட்களையும், அமைதியாக வாழும் இன்றைய பொழுதையும் ஒன்றாக மனசில் நிறுத்திப் பார்க்கையில், 'நானா, இப்படி மாறிவிட்டேனா! இது எப்படி சாத்தியமாயிற்று!' என்ற வியப்பு எழுந்தது. கூடவே ரொம்ப சந்தோஷமாகவும் இருந்தது.

**பா**லத்தில் ஏறி, கஜானாசாலையில் நடந்து, ஒரு சுற்று சுற்றிக் கொண்டு வீட்டை அடைவதற்குள், கிழக்கில் வானம் சிவந்து, சூரியன் தகதகக்கும் பந்தாய் வெளிப்படத் துவங்கிவிட்டான்.

அம்மா நீட்டிய காபியை அருந்திவிட்டு, மனோகர் வராந்தாவில் பேப்பருடன் உட்கார்ந்துகொண்டான்.

உள்ளே அம்மா 'எழுந்திரு சுதா, விடுஞ்சிடிச்சி' என்று பெண்ணை எழுப்புவது கேட்டது.

இன்னும் பத்து நிமிஷங்களில் சுதா பல் விளக்கி, முகம் கை கால்களைக் கழுவிக்கொண்டு வந்து, கணீரென்று 'சீதக்கலை செந்தாமரை பூம்பாத' என்ற வினாயகர் அகவலைப் பாடத் துவங்கிவிடுவாள்.

இதுதான் அம்மாவின் வளர்ப்பு முறை!

— குழந்தைகள் விடிந்த பிறகு தூங்கினால் குடும்பத்துக்கு ஆகாது.

— காலையில் எழுந்து நெற்றிக்கு இட்டுக்கொண்டு, முருகனை வணங்கி சுலோகங்கள் சொல்லச்சொல்ல, சகல சௌபாக்கியங்களும் வீடு தேடி வரும்.

— எழுந்ததும் காபி, அது இது என்று கண்டபடி குடித்து வயிற்றைக் கெடுத்துக்கொள்வது தவறு... பழையது, அல்லது ராகிகஞ்சி குடித்தால் உடம்புக்கு நல்லது; பசியும் எடுக்காது.

இப்படி எதையாவது அம்மா சொல்லிக்கொண்டே இருப்பதில், இதுநாள் தெரியாத பல விவரங்களை மனோகரா லும் அறிந்துகொள்ள முடிந்தது.

"ஏம்மா என்னை இத்தனை கண்டிப்புடன் நீங்க வளர்க்கலை? இவ்வளவு அழகா இப்ப சுதாவ வளக்கற நீங்க எப்படி என் இஷ்டப்படி இருக்க சம்மதிச்சீங்க?" என்று ஒருதரம் அவன் கேட்டபோது, என்ன பதில் சொல்வது என்று புரியாமல் ருக்மணி விழித்தாள். பின் யோசித்துப் பேசினாள். "நீ சின்ன வயசுலேந்தே அப்பா பிள்ளையா இருந்தே, மனோ... நா ஏதாச்சும் சொல்ல வந்தா 'போம்மா'னு போயிடுவ! ஹைஸ்கூல் படிக்கற நாள்லேந்தே நீ ஹாஸ்டல்ல தங்கிட்டதால, லீவுக்கு வர்ற பிள்ளைய கண்டிக்க எனக்கும் மனசு வராது. அப்புறம் நீ பெரியவனாயிட்டே; உனக்குனு ஒரு பாதையை அமைச்சிகிட்டே... நாம இனிமே வாய் திறந்து எதனாச்சும் சொன்னா, இருக்கற துளி பந்தமும் விட்டுடு மோன்ற பயம் துணிச்சலா பேச முடியாம செய்திடிச்சி..."

அம்மா வெளிப்படையாகப் பேச, இவள் மனசின் எத்தனை ஏக்கங்களை சின்ன வயசில் அடியோடு பொசுக்கி இருப்போம் என்ற குற்றஉணர்வுக்கு ஆளாக, அதை ஈடு செய்கிற மாதிரி, “போனதை விடுங்கம்மா. பேத்திய உங்க மனம் போல வளங்க. அப்படியே நானும் ஏதாவது தப்பா நடந்துக்கறேன்னு தோணிச்சின்னா, கண்டிக்கத் தயங்காதீங்க. என் இஷ்டத்துக்கு வாழ்ந்து சீரழிஞ்சது போதும்... இனியாவது நிம்மதியோட நா இருக்கணும்!” என்று அவளிடம் கூறவும் செய்தான்.

அம்மா சொல்படி வாழ்வதில் சுலபமாய் நிம்மதி கிடைக்கிற மாதிரிதான் மனோகருக்குத் தோன்றியது.

பெங்களூரை விட்டு வந்த புதிதில், நிர்மலா பேரைச் சொன்னாலே மனசு பொங்கிப்போகும். வலிவலி என்று துடித்து அட்டகாசம் பண்ணும். கை விரல்கள் நடுங்கும். மார்புக்குள் இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ளும்.

இப்போது அப்படி இல்லை.

நிச்சயமாய் இல்லை.

நிர்மலாவோடு வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து ஏக்கம் எழுவதில்லை.

அவள் இன்னொருவனோடு ஓடிப்போனதை எண்ணுகையில், ஆத்திரம் கொப்பளிப்பதில்லை.

என்னை ஏமாற்றிவிட்டாளே, அவளை என்னமாய் வைத்துக்கொண்டிருந்தேன் — என்ற புலம்பல்கள் எல்லாம் அடியோடு வருவதில்லை.

போகட்டும் — யாரோடு, யார் வேணுமானாலும் போகட்டும்.

இப்படி நடக்க வேணும் என்பதுதான் என் தலைவிதி என்றால், அதை யாரும் தடுக்க இயலாது.

அவள் போனதுகூட ஒரு விதத்தில் நல்லதுதான்; இல்லாவிட்டால், அம்மா, பெண்ணோடு இத்தனை நிம்மதியாக நான் வாழ முடியுமா?

வாழ்க்கையின் அர்த்தம் புரிந்து, ஒழுக்கம், கட்டுப்பாடு இவை தரும் சந்தோஷத்தை உணர்ந்திருக்க முடியுமா?

ம்ஹூம், இல்லை.

கண்டிப்பாய் இல்லை.

நிர்மலா என்னை விட்டுப் பிரிந்தது என் நன்மைதான்.

தனக்குத்தானே குருட்டு யோசனை பண்ணித் தெளிந்து விட்டதாக எண்ணிக்கொண்டதால், தன்னை, தன் சூழ்நிலையை, பழக்கவழக்கங்களை தலைகுப்புற மாற்றிக் கொள்வது மனோகருக்குக் கஷ்டமான ஒரு காரியமாக இருக்கவில்லை.

இதுநாள்வரை வாழ்க்கையை அலைக்கழித்தது குடிப் பழக்கம்தானே என்ற வெறுப்பில் முதலில் அதை அடியோடு வெறுத்து ஒதுக்கினான்.

பின், அம்மாவிடம் சொல்லிவிட்டதற்காக சிகரெட்டை விட்டான்.

மாதத்தில் கண்டிப்பாய் நாலைந்து சினிமாக்களுக்காவது செல்வது என்றிருந்த பழக்கத்தை மாற்றிக்கொண்டான்.

பத்திரிகைகள், சினிமா மனசைக் கெடுக்கும் என்று அம்மா சொன்னதை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ள முயற்சித்தான்.

'நம்ம பக்கத்து பழக்கவழக்கங்கள், பேச்சுவார்த்தை வேணும்னா, கான்வெண்ட் படிப்பு வேணாம்' என்ற அம்மா வின் கருத்தை ஆதரித்து, மகளை அருகில் இருந்த தமிழ் மீடியம் பள்ளியில் சேர்த்தான். தன்னைப் பொறுத்தவரை யில்கூட ஆங்கிலத்தில் பேசுவது, மேல்நாட்டுப் பழக்கவழக்கங் களை அனுசரிப்பது முதலியவற்றைக் கொஞ்சம்கொஞ்சமாய் குறைத்துக்கொண்டான்.

மொத்தத்தில், திருச்சிக்கு வந்துவிட்ட ஆறே மாதத்தில் நிர்மலாவோடு வாழ்ந்த வாழ்க்கையின் சாயல்கூட வேண்டாம் என்று வைராக்கியம் பூண்டுவிட்டதுபோல ஆள் ரொம்பத்தான் மாறிப்போனான்.

"ஆசனம் சரியா இல்லே சுதா, காலை மடக்காதே. மூச்சை கஷ்டப்பட்டுகிட்டு விடற மாதிரி தோணுதே... ஈஸியா இழுத்துவிடு! கழுத்தை ரொம்ப விரைப்பா வச்சி ருக்கே... தசைகளைத் தளர்த்திக்க. ம்ம்... அப்படித்தான்."

மகள் சர்வாங்காசனம் செய்வதைக் கிட்ட நின்று கண்காணித்துக்கொண்டிருந்த மனோகர், கந்தர் அனுபூதியும் கையுமாய் கூடத்து ஊஞ்சலில் அமர்ந்திருந்த அம்மாவின் முகத்தில் லேசான களிப்பைக் கவனித்து, புன்னகைத்தான்.

பெண்குழந்தைக்கு பைஜாமா, சட்டையை மாட்டி அன்றாடம் காலையில் யோகாசனம் கற்றுத்தருகிறேன் என்று தான் முனைந்ததில் அம்மாவுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை என்பது மனோகருக்குத் தெரியும்.

"நீ ஆம்பிளை; ஆசனம் போடறது சரி... இவளுக்கு எதுக் காக, யோகாசனமும், பிராணாயாமமும்? பொம்பளைக்கு இதெல்லாம் அவசியமா?"

வழக்கமாய் அம்மா எது சொன்னாலும் சரி என்று ஏற்கும் மனோகர் இதற்கு மட்டும் சம்மதிக்கவில்லை.

"மன உடம்பு கட்டுப்பாட்டுக்கு யோகாசனம் செய்றது ரொம்ப முக்கியம்மா. புத்தியைக் கண்டபடி அலையவிடாம இருக்க ஆசனங்கள் உதவும்னு பெரியவங்க சொல்லி இருக்காங்க. ஏன், என்னையே எடுத்துக்கங்களேன்... யோகா செய்யற இந்த நாலைஞ்சி வருஷமா எனக்கு ஒரு சின்னத் தலைவலிகூட வந்ததில்லையே! நாலுத்துக்கும் இந்தப் பயிற்சி நல்லதுனு நினைக்கறதாலத்தான் சுதாவுக்கு சொல்லித் தரேன்... தடுக்காதீங்கம்மா."

மனோகர் சொல்வது போல, சில வருஷங்களாய் இவ னிடம் தோன்றியிருக்கும் தீவிர பழக்கங்களில் யோகாசனம் செய்வதும் ஒன்று.

காலையில் வாக் போய்விட்டு வந்து, காபி சாப்பிட்டு, பேப்பரைப் படித்த பின்பு, ஏழிலிருந்து எட்டுவரை அன்றா டம் கட்டாயம் யோகாசனம் செய்வது அவனிடம் ஒரு வெறியாகப் போய்விட்டது என்றுகூடச் சொல்லலாம்.

யோகி ஒருவர் நடத்திய வகுப்புகளுக்குத் தொடர்ந்து மூன்று மாதங்கள் போய்விட்டு வந்தவனுக்கு, அந்த உடம்புப் பயிற்சியும், மூச்சுக் கட்டுப்பாடும் அலாதி புத்துணர்ச்சியைத் தருகிற மாதிரி தோன்ற, வீட்டில் தினமும் தவறாமல் ஒருமணி நேரத்தை அதற்காக ஒதுக்கினான்.

எட்டுக்கு யோகாசனம் முடிந்து மீண்டும் குளித்தால், அரைமணி போல பூஜை, தியானம்.

மனோகரை வெகுவாகத் தன் வயப்படுத்திக்கொண்ட விஷயங்களில், யோகாவை அடுத்து பூஜை புனஸ்காரங் களுக்குத்தான் இரண்டாவது இடம் கிடைக்கும்.

முதலில் துளி விபூதியை நெற்றியில் இட்டுக்கொள்வதில் தொடங்கிய இந்த இறைபக்தி, நாளாக ஆக வளர்ந்து, கோவில்களுக்குச் செல்வதில், கதாகாலாட்சேபங்கள் கேட்பதில், புராணங்களைப் படிப்பதில் வந்து நின்றது.

அப்புறம், இன்னும் தீவிரமாக அதில் ஈடுபடச் செய்து, குரு ஒருவரைத் தேடிச் செல்லவைத்து, மந்திரங்களை உபதேசமாகப் பெற்றுக்கொள்ளவும் தூண்டியது.

இப்போது என்னடாவென்றால், சின்னதாக ஸ்படிகத்தில் சிவலிங்கத்தை வெள்ளித் தட்டில் வைத்து, மந்திரங்கள் சொல்லி நீராலும், பாலாலும் அபிஷேகம் செய்கிறான். பூக்களால் படங்களை அலங்கரித்து, சின்னக் குழந்தையாய் குதூகலிக்கிறான். இதெல்லாம்கூட அதிசயமில்லை... ஆனால், நெற்றியில் சந்தனப் பொட்டோடும் கழுத்தில் துளசி மணி மாலையோடும், மனோகர் நிற்பது சகஜமாகிவிட்டது, உண்மையிலேயே ஒரு பெரிய மாறுதல்தான்.

இரண்டு வருஷங்களாக மாலை போட்டுக்கொண்டு சபரிமலைக்குப் போய்வருவதிலிருந்து, வீட்டில் பஜனை நடப்பது வேறு அதிகரித்துவருகிறது.

வியாழன் தோறும் குருவார பஜனையும், சனிக்கிழமை யானால் சத்யநாராயண பஜனையும் கட்டாயம் உண்டு.

பஜனை மண்டலிகளைச் சேர்ந்தவர்கள் ஏழு மணி சுமாருக்கு மனோகர் வீட்டில் கூடுவார்கள்.

ஒருத்தர் சுருதிப் பெட்டி போட, ஒருவர் சப்ளாக்கட்டை சப்திக்க, இன்னும் ஒருவர் ஜால்ராவில் தாளம் தட்ட, அமர்க்களமாய் பஜனைப் பாடல்களை எல்லோருமாய்ச் சேர்ந்து பாடுவார்களா.

கணபதி ஸ்தோத்திரத்தில் துவங்கி, குரு, முருகன், அம்மன், ஈஸ்வரன், நாராயணன் என்று பாடல்கள் நீண்டு, அனுமனைப் பற்றிய பாடலில் வந்து முடிய இரண்டு மணி நேரங்கள்கூட ஆகும்.

வந்தவர்களுக்கெல்லாம் ருக்மணி, நைவேதனம் பண்ணிய சுண்டலை விநியோகிக்க, சமையல்கார அம்மா இருந்தாலும் பாட்டிக்குக் கூடமாட அத்தனையிலும் சுதா ஒத்தாசை பண்ணுவாள்.

பாவாடை தாவணி அணிந்துகொண்டு, அடக்கத்தோடு வளையவரும் பெண்ணைப் பார்க்கையில் மனோகருள் பெருமை ததும்பும்.

இடுப்பு துளி தெரியாமல் இறங்கிவந்து மூடும் ரவிக்கை.

அழுந்த வாரி பின்னப்பட்ட பின்னல்.

இருந்த இடத்தை விட்டு அசையாமல் செண்டாய் பூ.

கேட்கிற கேள்விக்கு பவ்யமாய் பதில் சொல்லும் தோரணை.

எத்தனை அருமையான வளர்ப்பு இது!

பாருங்கடா என் பெண்ணை,, அவள் அடக்கத்தை— என்ற பெருமிதம் கண்களில் மிதக்க, உன் பெண் ரொம்ப சமர்த்து, மனோகர் — என்று நண்பர்கள் தரும் பாராட்டை தலையசைத்து ஏற்றுக்கொள்வான்.

பின்னே!

இவளை வளர்க்க இவனும் அம்மாவும் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா நஞ்சமா?

நிர்மலாவின் குணத்தில் தப்பித்தவறி கடுகத்தனைகூட இவளுக்கு வந்துவிடக் கூடாது என்பதில் எத்தனை விழிப்புடன் இருந்திருக்கிறார்கள்!

பெண்ணுக்கு விவரம் புரிந்த நாளிலிருந்தே தாயைப் பற்றிப் பேசுவதை அவள் தவிர்க்கவேண்டும் என்பதை அவ்வப்போது உணர்த்திக்கொண்டேதான் மனோகர் வந்திருக்கிறான்.

“அம்மா எங்கப்பா?” என்றால், கூசாமல், “செத்துப் போயிட்டாம்மா” என்று சொல்லிவிட்டுப் பேச்சை மாற்றிவிடுவான்.

ஆனால், இன்னும் கொஞ்சம் விவரம் புரிந்த பிறகு பாட்டி மூலம், அம்மா சாகவில்லை; தங்களை விட்டு ஓடிவிட்டாள் என்ற உண்மை லேசாகப் புரியத் துவங்கிய பிறகு ‘அம்மா ஏம்ப்பா நம்பளை விட்டுட்டு ஓடிட்டாங்க?’ என்று அப்பாவித்தனத்துடன், எல்லாரையும் போல தனக்கு அம்மா வேண்டும் என்கிற ஏக்கத்தில் கேட்டதுண்டு.

அப்போதுகூட பெண்ணுக்குப் புரியுமா, புரியாதா என்கிறதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் “என்னைப் பொறுத்தவரை உங்கம்மா செத்துத்தான்போயிட்டா, சுதா” என்று அவன் அழுத்தம்திருத்தமாகப் பதில் சொல்லி இருக்கிறான்.

ஒரே ஒரு தரம் மட்டும்... அப்போது சுதாவுக்குப் பத்து வயது இருக்குமா? இருக்கும்... ‘எனக்கு அம்மாவப்பார்க்கணும் போல இருக்குப்பா... அம்மா வழியா எனக்கு ஒரு மாமாவும், தாத்தாவும் இருக்காங்களாமே, எனக்கு அவங்களையும் பார்க்கணும் போல இருக்குப்பா’ என்று அதிசயத்திலும் அதிசயமாய் அவள் பிடிவாதம் பிடித்தபோது, மகள் தோளை அழுந்தப் பற்றி கண்களைப் பார்த்துப் பேசினான்:

“லிஸன் சுதா— உன்னையும், என்னையும் வேணாம்னு உதறிட்டு இன்னொருத்தனோட ஓடிப்போனவ உங்கம்மா... முன்னே நா சொன்ன மாதிரி, என்னைப் பொறுத்தவரை அவ செத்துப்போனவதான்! அதோட அவ அண்ணன், அப்பா அத்தனை பேர் உறவையும் நா அடியோட மறந்திட்டேன், நமக்குத் துரோகம் பண்ணவங்களை நீயும் மறந்திடணும் வெறுக்கணும், அதான் சரியான காரியம். இனி ஒரு தடவை திரும்ப அம்மா பத்தின பேச்சை நீ எடுக்கக்கூடாது. ப்ராமிஸா எடுக்கக்கூடாது! எடுத்தா நா

பொல்லாதவனாயிடுவேன். புரிஞ்சிக்கிட்டியா!" என்றவன், பக்கத்துலேயே நின்றிருந்த அம்மாவிடமும், "உங்ககிட்டயும் சொல்றேன்... இனிமே நிர்மலாவைப்பத்தி எந்தக் காரணத்தைக் கொண்டும் இவகிட்ட பேசாதீங்க. தேவையில்லாத விவரம் எதையாவது சொல்லி இவ குழம்பிப்போக காரணமா இருக்காதீங்க. இப்பதான் சில வருஷங்களா நா நிம்மதியா இருக்கேன். அதை யாரும் கெடுத்திடாதீங்க!" என்றும் அதட்டலாகச் சொன்னான்.

சுதா புத்திசாலி.

தந்தை முரட்டுக் குணம் கொண்டவர், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிப்பவர். இவர் சொல்வதைக் கேட்காதுபோனால், விளைவுகள் மோசமாக இருக்கும். எதுவும் இவருக்குத் தன் விருப்பப்படிதான் நடக்க வேண்டும். போகட்டும்—இதுவும் இவர் இஷ்டப்படியே இருக்கட்டும் என்று மூச்சு விடாமல் அடங்கிப்போனாள்.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பதைப் போல, அதற்கப்புறம் அவள் தாயைப்பற்றி வாயைத் திறந்து ஒரு கேள்வி கேட்டதில்லை.

"இன்னுமா அஞ்சு நிமிஷம் ஆகலை?"

சர்வாங்காசனத்தில் மகளை நிறுத்திவிட்டு என்னமோ யோசனையில் ஆழ்ந்திருந்த மனோகர், திடுக்கிட்டுத் திரும்பினான்.

"கூட ஒரு நிமிஷம் நின்னா ஒண்ணும் ஆயிடாது... அதுக்குள்ள பொறுமை போயிடிச்சா? சரி, இறங்கு. மெதுவா மத்ஸயாசனம் ரெண்டு நிமிஷமும், சவாசனம் அஞ்சு நிமிஷமும் போட்டுட்டு குளிக்கப் போ, பள்ளிக்கூடத்துக்கு நாழியாயிடப்போவுது."

பத்து நிமிஷத்தில் ஆசனங்களை முடித்துக்கொண்டு அவள் வெளியில் செல்ல, மனோகர் தன் பயிற்சிகளை வரிசையாய்ச் செய்தான்.

எட்டரைக்குக் குளித்து, பூஜையைக் கவனித்து, பின்னர் அன்றைக்கு சஷ்டி என்பதால் முப்பத்தாறு முறை கந்தர் சஷ்டி கவசத்தைச் சொல்லும் பழக்கத்தின்படி வாசல்

அறைக்கு வந்து உட்கார்ந்து, 'அமரர் இடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி' என்று வாய்விட்டுச் சுலோகத்தைச் சொல்ல ஆரம்பித்தான்.

## 8

சுதா அசிரத்தையுடன் புடவையைக் கொசுவி உள் பாவாடையில் சொருகினாள்.

மேலாக்கை இழுத்து தோளைப் போர்த்திக் கொண்டாள்.

அதே சுவாரஸ்யமில்லாத்தனத்துடன் தலையை வாரிப் பின்னினாள்.

பெளடர் பூசாத முகத்தில் குங்குமத்தினால் பெரிய பொட்டாக இட்டுக்கொண்டாள்.

கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தை பார்க்கக்கூடப் பிடிக்காமல், புத்தகங்களையும் டிபன் பாக்ஸையும் எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்தாள்.

வாசலில் ரங்கசாமி, மணி ஆகிவிட்டதைக் குறிக்க பெல்லை அடித்து ஓசை எழுப்பினான்.

முன்னறைக் கதவிடம் நின்று, ஆபீஸுக்குப் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்த அப்பாவிடம், "போயிட்டு வரேன்..." என்றாள் மெல்லிய குரலில்.

"சாப்பிட்டாச்சா?"

"ம்..."

"டிபன் பாக்ஸ் எடுத்துக்கிட்டியா?"

"ம்..."

"மழைக்காலமா இருக்கு... சாயங்காலம் லேட் பண்ணாம சுருக்கா வந்திடு. ரங்கசாமி ஒழுங்கா வரான் இல்லே?"

"ம்..."

"சாமியப்பா வீட்டுல இன்னிக்கு பஜனை இருக்கு... நா போகணும். எட்டுக்குள்ளார வந்திடறேன். நீ எங்கயும் போகாம வீட்டிலியே இரு. என்ன?"

"ம்..."

சொல்லவேண்டியவற்றை மனோகர் சொல்லி முடிந்ததும் சுதா வாசலுக்கு வந்து, காத்திருந்த சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி அமர்ந்தாள்.

"போலாமா பாப்பா?" என்று கேட்டுவிட்டு ரங்கசாமி பெடலை மிதிக்கத் தொடங்கினான்.

இந்த ரங்கசாமிக்கு வயது அறுபதுக்குக் குறையாது. தேடிப்பிடித்து வயசானவனாகப் பார்த்து, மகள் காலேஜூக்குப் போய்வர, இவனை மனோகர் அமர்த்தியிருக்கிறான்.

"சைக்கிள் ரிக்ஷா எதுக்குப்பா? நா பஸ்ஸிலேயே போயிட்டுவந்திடறேனே, பஸ் ஸ்டாப் வீட்டு வாசல்ல இருக்கு..."

"காலம் கெட்டுக்கிடக்கு. சின்னப் பசங்க தாறுமாறா பேசுவாங்க. முரட்டுத்தனமாக நடந்துப்பாங்க. இந்த மாதிரி வயசானவன்தான் சரி! நா சொல்றதைக் கேட்டுகிட்டு போயிட்டுவரதுன்னா போ; இல்லென்னா காலேஜ் படிப்பே வேணாம். பேசாம வீட்டோட இருந்திடு! ஆச்சுனு நல்ல இடமா பார்த்து, கட்டிக்கொடுத்திடறேன்."

அப்பா என்றைக்குமே கண்டிப்பாக இருப்பார்தான்; என்றாலும், பாட்டி போய்விட்ட இந்த இரண்டு வருஷமாய் கெடுபிடியும் கத்தலும் ரொம்பத்தான் அதிகமாகிவிட்டன.

— வாசல்ல காரணமில்லாம நிக்காதே!

— காய்கறிக்காரனுடன் அப்படி என்ன பேச்சு?

— நேத்து கோயில்ல யாரைப் பார்த்து சிரிச்சே?

— இன்னிக்கு காலேஜ்லேந்து திரும்ப ஏன் லேட்?

— இத்தனை மெல்லிசாய் புடவை உடுத்தாதே— ஏது இது? முதல்ல தூக்கி எறி.

— டைலர்கிட்ட ரவிக்கை தைக்கக் கொடுக்கணும்னா நீயே போகணுமா? என்கிட்ட கொடுக்கறதுக்கென்ன?

— தலைமுடியை எதுக்காக இப்படி பறக்க விட்டிருக்கே? எண்ணெய் தடவி பாந்தமாய் பின்னிக்கோ.

— நாளைக்கு டெஸ்ட் இருந்தா என்ன? பஜனைலே கலந்துகிட்ட பிறகு படிக்க உட்காரலாம். நான்தான் படிக்கறேன்னு பிகு பண்ணிக்காதே.

— மணி ஆறு, எழுந்திருக்க மனசில்லையா? எப்போ எழுந்து எப்போ யோகாசனம் பண்றதா உத்தேசம்?

அதிகாரம், கண்டிப்பு, விரட்டல்.

இந்த அப்பாவுக்கு இவற்றைத் தவிர வேறு ஒண்ணுமே தெரியாதா?

இவர் செய்வதெல்லாம் நானும் செய்தே ஆக வேண்டுமா?

இவருக்குப் பிடிப்பதெல்லாம் எனக்கும் பிடித்தே ஆக வேண்டுமா?

எனக்கென்று ஒரு தனி விருப்பு, வெறுப்பு இருக்கக் கூடாதா?

ஐந்தரைக்கு எழுந்திருக்க வேண்டும்—ஆறரை மணிவரை படிப்பு, பின் யோகாசனம், குளியல், பூஜை, சாப்பாடு, உடனே கல்லூரி.

மாலையில் கல்லூரி விட்டதும் அக்கடா என்று சினேகிதிகளுடன் உட்கார்ந்து நாலு வார்த்தை பேசக்கூடாது. விளையாட்டு மைதானத்தில் நின்று மற்றவர்கள் விளையாடுவதை வேடிக்கை பார்க்கக்கூடாது. காத்திருக்கும் ரிக்ஷாவில் ஏறி வீட்டுக்கு வந்து, முகம் கழுவி டிபன் சாப்பிட்டுப் படிக்க வேண்டும். பஜனை நடக்கும் நாட்களில் அதில் பங்குகொள்ள வேண்டும். ஹோம் வொர்க்கை முடித்து, பத்துக்குள் விளக்கை அணைக்க வேண்டும், இல்லாவிட்டால் அதற்கு ஓர் உறுமல்.

எல்லா சின்ன வயசுப் பெண்களையும் போல பத்திரிகைகள் படிப்பது? சினிமா பார்ப்பது? சினேகிதிகள் வீட்டுக்குச்

சென்று வருவது? ரேடியோவில் விவிதபாரதி சினிமாப் பாடல்கள் கேட்பது? ம்ஹூம்... ஒரு மண்ணாங்கட்டியும் கூடாது! எல்லாம் தவறான காரியங்கள், செய்யத் தகாதவை.

இரண்டு வேளையும் நியூஸ் கேட்கலாம், போனால் போகிறதென்று நல்ல கர்நாடக இசைக் கச்சேரிகளைக் கேட்கலாம், அவ்வளவுதான்.

என்ன வாழ்க்கை இது!

ஜெயில் கைதிகளுக்குக்கூட இன்னும் கொஞ்சம் சுதந்திரம் இருக்கும்போலத் தோன்றுகிறதே?

இவர் ஏன் இப்படி இருக்கிறார்?

ஒரு தரம் வகுப்பு மாணவிகள் எல்லோருமாகச் சேர்ந்து தஞ்சைக்குப் பிக்னிக் போனபோது தானும் உடன் செல்லக் கேட்டதும், “தனியா உன்னை எங்கயும் அனுப்பமாட்டேன்னு தெரியுமில்லே? அப்புறம் ஏன் வீணா கேட்கிறே?” என்று இவர் பதில் சொன்னபிறகு, இவள் இங்கு போகட்டுமா, அங்கு செல்லட்டுமா என்று ஆசையுடன் கேட்கிறதை அடியோடு நிறுத்திக்கொண்டுவிட்டாள்.

வகுப்பில் இவளுக்குப் பேர் துறவி!

— சுதாவா? அவகிட்ட ஒரு பேச்சும் வெச்சுக்காதே, சரியான கேஸ் அவ என்று சலித்தார்கள்.

— இந்த வயசிலே துளி ஆசை இல்லாமே எப்படி சன்யாசினியா இருக்க முடியறதோ என்று ஆச்சரியப்பட்டார்கள்.

— சரியான ஜடம் சுதா நீ என்று பழித்தார்கள்.

அத்தனையும் கேட்டுவிட்டு வாயைத் திறக்காமல் சுதா நகர்ந்துவிடுவாள்.

தாங்க முடியாதுபோனால், வீட்டுக்கு வந்து பாத்ருமில் சத்தம் போடாமல் அழுவாள்.

அவளை ஒத்த மாணவிகளெல்லாம் ஜீன்ஸ், பனியன் அல்லது நைலக்ஸ் சாரியில் பவனிவந்தால், இவள் மட்டும் போர்த்தின காட்டன் புடவையில் வகுப்புக்கு வருவாள்.

கல்லூரியில் சேர்ந்த இந்த இரண்டு வருஷங்களில், அவள் காண்டீன் பக்கம் போன நாட்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

மதியத்துக்கு, சமையல்காரம்மா பால், தயிர் விட்டுப் பிசைந்து கொடுக்கும் தயிர்சோறுதான், அலுக்காமல் சலிக்காமல் நித்தமும்.

என்னமோ தெரியவில்லை, சில நாட்களாக 'ச்சே, என்ன வாழ்க்கை இது!' என்று மனசு ரொம்பத்தான் வெறுத்துப் போயிருக்கிறது.

எதுவும் சுவாரஸ்யம் இல்லை.

யாருடனும் நின்று ஒரு வார்த்தை பேசக்கூட விருப்பம் இல்லை.

எரிச்சல், அலுப்பு, சலிப்பு.

மிஞ்சிப்போனால் அழத் தோன்றுகிறது. எதுவும் செய்யத் தெரியாத கையாலாகாத்தனத்துடன்.

தத்... கூண்டுக்கிளி மாதிரி இப்படியும் வாழவேண்டுமா?

மனசு இருந்த இருப்பில், மதியம் சாப்பிடக்கூட சுதாவுக்குப் பிடிக்கவில்லை.

கொன்றை மரத்தில் அமர்ந்து உல்லாசமாய் கத்தித் தீர்த்துக்கொண்டிருந்த காக்கைகளுக்கு டப்பாவோடு சோற்றைக் கவிழ்த்தாள். அவை யாருக்கும் பயப்படாமல் ஆனந்தமாய் குரலெடுத்து பேசி, சாப்பிட்டு மகிழ்வதைத் தள்ளி நின்று பார்த்தாள். ஒரு டம்ளர் தண்ணீர் மட்டும் குடித்துவிட்டு வகுப்பைப் பார்க்க நடந்துவிட்டாள்.

மாலையில் நாலு மணிக்கு கல்லூரி மணி அடித்ததும், மற்றவர்களின் குஷியான பேச்சில் கலந்துகொள்ளாமல், கீ கொடுக்கப்பட்ட பொம்மை மாதிரி நடந்துவந்து, காத்திருந்த ரிக்ஷாவில் ஏறிக்கொண்டாள்.

சினேகிதிகள் இல்லை... இப்படிச் சொல்வது உண்மையான வார்த்தை இல்லை... சினேகத்துடன் பழகுபவள்தானே சினேகிதி? இவள் யாருடன் சினேகத்துடன் பழகுகிறாள்?

அவளுக்கு நான் சினேகிதி என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள? யார் வீட்டுக்கும் இவள் போகக்கூடாது, யாரும் இவள் வீட்டுக்கும் வரக்கூடாது... அப்புறம் இவள் சினேகி தத்தை எவள் விரும்புவாள்? சகமாணவிகள் கூட்டமாய் நின்று நாளை மறுநாள் கிராண்ட் அணைக்கட்டிற்குச் செல்லப்போகும் பிக்னிக் பற்றி சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்க, பிக்னிக்குப் போகாத இவள் அந்தப் பேச்சுக் களில் கலந்து கொண்டால் சிரிக்கமாட்டார்களா?

ரிக்ஷாவில் அமர்ந்திருக்கையில், தன் கைத்தறிப் புடவையையும் சுத்தமாய் வெட்டப்பட்ட நகங்களையும், கழுத்தில் பிடரியைக் கசகசக்க வைத்து சாட்டையாய்த் தொங்கின பின்னலையும் பார்க்கப்பார்க்க, நச்நச்சென்று ஆத்திரம் வெடித்தது.

அவளவள் லேட்டஸ்ட் கோட்டா, ஆர்கென்ஸா புடவை உடுத்தி, காலேஜுக்கு வருகிறாள்.

நான்?

— இது புடவையா? சல்லாத் துணியாட்டம் இல்லே இருக்கு! புடவை உடம்பு மூடறதுக்கு உடுத்தறது; திறந்து காட்டறதுக்கு இல்லே! ஞாபகம் வச்சிக்க.

நீளமாய் வளர்க்கப்பட்டு பாலிஷ் பூசின நகங்கள் என்றால் சுதாவுக்குக் கொள்ளைப் பிரியம்.

— நகத்தை ஏன் இத்தனை வளர்த்துகிட்டிருக்கே, சூர்ப்பனகை மாதிரி? வீட்டு குடும்பப் பெண்ணா லட்சணமா இரு.

குடும்பப் பெண், அடக்கம், ஒடுக்கம்.

இவற்றைக் கேட்டுக்கேட்டு புளித்துப் போய் விட்டது.

ஊர் உலகத்தில் இல்லாத பண்பாடு, கட்டுப்பாடு...

சின்னப் பெண்ணுக்குரிய ஆசாபாசங்களை, விருப்பு வெறுப்புகளையெல்லாம் தோண்டிப் புதைத்துவிட்டாவது என்ன குடும்பப் பெண் பட்டம் வேண்டிக்கிடக்கிறது!

**வீ**டு வந்துவிட்டது.

இறங்கி உள்ளே போய், டிபன் வேண்டாம் என்று சொல்லிவிட்டு காபி மட்டும் குடித்தாள்.

அப்பா இப்போதைக்கு வீட்டுக்கு வரமாட்டார்; எட்டரையாகும் திரும்ப— என்ற நினைப்பு சிறிது சுதந்திரத்தைத் தர, மொட்டைமாடிக்குப் போய் நின்றுகொண்டாள்.

இதுநாழிகை தூறிக்கொண்டிருந்த தூறல் நின்றுபோய் காலடியில் ஈரம் சிலுசிலுத்தது; தென்றல் மந்தஹாஸமாய் முகத்தை வருடியது.

பெருமூச்சுடன் கைப்பிடியில் சாய்ந்துகொண்டவள், “குட் ஈவினிங்” என்று குரல் கேட்டு வேகமாய்த் திரும்பினாள்.

அவன்தான், அந்தப் பக்கத்து வீட்டு ராஜ்குமார் தான்.

வலுவான புஜங்கள், அடர்த்தியான மீசையுடன் கவர்ச்சியாய்ச் சிரித்தான்.

இவன் பக்கத்து வீட்டுக்கு வந்து இரண்டு மூன்று மாசங்கள் ஆகியிருக்கும். ஏதோ மருந்துக் கம்பெனியில் மெடிகல் ரெப்ரஸன்டேடிவ்.

மாடி ஒற்றை அறையை இப்படி தனி ஆளுக்கு வாடகைக்கு விட்டுவிட்டதில், அந்த வீட்டுக்காரர்மேல் மனோகருக்கு அசாத்திய கோபம்...

‘கண்ட கழிசடைங்க எல்லாம் பக்கத்து வீட்டுல குடி வந்திருக்கு... நீ கண்ல படாம அடக்கமா இருந்துக்க’— என்று இவளைக் கண்டித்துவைக்க முடிந்ததே ஒழிய, ராஜ்குமாரை அங்கிருந்து கிளப்ப இயலவில்லை.

ராஜ்குமார் வெகு கெட்டிக்காரன்.

முதல் நாளே மனோகரின் கடுவன்பூனை குணத்தைப் புரிந்துகொண்டு அவளிடமிருந்து எட்டவே இருந்தான்.

ஆனால் தனிமை கிடைத்தால், சரியான சமயம் வாய்த்தால், சுதாவைப் பார்த்து சிரிக்கவும், ஹலோ சொல்லவும், “பாவங்க நீங்க... ஹாஸ்டல் வார்டன்கூட உங்கப்பா மாதிரி கண்டிப்பா இருக்கமாட்டாங்க!” என்று அனுதாபப் படவும் தவறவில்லை.

நிலைமை புரிந்து பரிதாபப்படும் ஒரே ஆத்மா என்ற காரணத்தால், சுதா அந்தப் பரிவான வார்த்தைகளுக்கு அவ்வப்போது செவிசாய்ப்பது வழக்கம்தான்.

"அப்பா வீட்டுலே இல்லியா? அதான் தைரியமா மாடிக்கு வந்து நிக்கிறீங்களா?"

பேசியவனை நிமிர்ந்து பார்க்கத் துணிச்சல் இல்லாமல் சுதா தலைகுனிந்து நின்றாள்.

"கேக்கறேன்னு தப்பா எடுக்காதீங்க... நேத்து காலைல உங்க வீட்டுலே கத்தல் பெரிசா இருந்திச்சே?"

முதல் நாள் மனோகர் கோபமாய் கத்தினது நிஜம் தான்.

இன்று சுதா மனசு வெகுவாகக் கசந்துபோயிருப்பதற்கு அதையும் ஒரு காரணமாகச் சொல்லலாம்.

"என் க்ளாஸ்மேட் ராமலக்ஷ்மிக்கு இன்னிக்குப் பிறந்தநாள்..."

"அதனால?"

"க்ளாஸ் பூராவையும் சாயங்காலம் நாலு மணிக்கு டீக்கு வீட்டுக்குக் கூப்பிடிருக்கா..."

"அதனால?"

"வந்து .. நானும் போலாமா.."

மனோகர் படித்துக்கொண்டிருந்த திருவாசகத்தைப் பட்டென்று மூடினான்.

"இந்த மாதிரி பர்த்டே பார்ட்டி, அது—இதுனு போறது எனக்குப் பிடிக்காதுனு தெரியுமில்லே?"

"இல்லே.. அவ.."

பேசவிடாமல் மனோகர் கத்தினான்.

"எவளாயிருந்தாலும் சரி, நீ போகக் கூடாது! இதெல்லாம் எனக்கு சுத்தமா பிடிக்காதுனு புரிஞ்சும் தைரியமா முன்னால நின்று கேக்கறியே? ம்? கொஞ்ச நாளாவே உன் போக்கு நல்லாயில்லே, சுதா... சரியா படிக்கறதில்லை, பஜனைகள்ல ஏனோதானோனு கலந்துக்கறே! ஏதாவது சொன்னா

முகத்தைத் தூக்கிவைச்சிகிட்டு சாப்பிடாம படுத்துடுறே! என்ன இதெல்லாம்? நா கவனிக்கலைனு நினைக்கிறியா?”

“...............”

“ஏதாவது கேட்டா இடிச்சபுளி மாதிரி நின்னிடு! இன்னொரு தரம் பார்ட்டி, கீர்ட்டினு கேட்டுகிட்டு வந்தா நா ரொம்பப் பொல்லாதவனா ஆயிடுவேன்! புரியுதா? உள்ளே போ.”

இனிமேல்தான் பொல்லாதவனாக மாற வேண்டுமா?

இப்போது மட்டும் என்ன வாழ்கிறதாம்?

கண்களில் துளிர்த்த நீரை மறைக்கவேண்டி அவசரமாய் திரும்பித் தன் அறைக்கு வந்துவிட்டாலும், இப்போது ராஜ்குமார் பரிவுடன் வினவியதும் அடக்கிய கண்ணீர் மீண்டும் துளிர்த்தது.

“ஸ்... என்னங்க நீங்க? கேட்டது தப்புனா மன்னிச்சிடுங்க... ப்ளீஸ் சுதா... சாதாரண விஷயத்துக்கு நாலு வீட்டுக்குக் கேட்கற மாதிரி கத்தினாரேனு உங்களுக்கு ஆறுதல் சொல்லத் தாங்க பேச்சை எடுத்தேன். ஸாரிங்க..”

யாருமே தன்னிடம் காட்டத் துணியாத கரிசனத்துடன் ராஜ்குமார் பேசுவதாகத் தோன்ற, அன்று முதல்முறையாய், “எல்லாம் என் தலைவிதிங்க, யாரைக் குத்தம் சொல்லி என்ன பிரயோஜனம்...” என்று சின்னதாக சுதா புலம்பி னாள்.

இந்தப் புலம்பல் அவர்களிடையே ஒரு நெருக்கமான பந்தம் உருவாக விதையாய் இருக்க, அடுத்துவந்த நாட்களில் அந்தப் பிணைப்பு, யார் கண்ணிலும், கவனத்திலும் படாமல் மளமளவென்று வளர்ந்தது.

ராஜ்குமார் கெட்டிக்காரன் மட்டுமில்லை, எமகாதகன் கூட.

ரங்கசாமிக்கு ஒன்று இரண்டு என்று கையில் கொடுத்து தாஜாபண்ணிவிட்டதில், கல்லூரிக்குப் போகும், வரும் வழியில் சில நிமிஷங்கள் ரிக்ஷாவை மறைவான இடத்தில் நிறுத்தி, அவர்கள் மனம்விட்டுப் பேசிக்கொள்ள வாய்ப்புக்

கொடுக்க, ரொம்ப சீக்கிரமே வெறும் சினேகிதமாக இருந்த நட்பு, காதலாக மாறி, ஆணிவேர் விட்டுக்கொண்டு ஸ்திரப் பட்டுப்போனது.

## 9

“என்ன தீர்மானம் பண்ணியிருக்கே, சுதா?”

“நாழி ஆச்சி, மனசிலே இருக்கறதை வாயைத் திறந்து பேசிடு... சம்மதம்னா சரி, இல்லைன்னா தயங்காம சொல்லிடு...”

“ப.. பயமா இருக்கு, ராஜ்...”

“என் மேல நம்பிகை இல்லியா?”

“சே, பெரிய வார்த்தைகளை ஏன் சொல்றீங்க? நம்பிக்கை இல்லாமலா இத்தனை பழகினேன்?”

“அப்ப ஒரு முடிவுக்கு வந்திடவேண்டியதுதானே?”

சுதா நகத்தைக் கடித்தாள்.

யோசனையுடன் கைக்குட்டையின் நுனியைத் திருகினாள்.

“வானம் இருட்டிகிட்டு வருது... ஐயா ஆபீஸ்லேந்து வந்திட்டார்னா கஷ்டம். புறப்படலாமா, பாப்பா?”

ரங்கசாமி எட்டிப்பார்த்துக் கேட்க, சுதா எழுந்து நின்றாள்.

“பதில் சொல்லாமப் போனா?”

“யோசிக்க டைம் கொடுங்க, ராஜ்...”

“ரெண்டு மாசமா யோசிக்கறது பத்தாதா?”

“ப்ளீஸ் ராஜ்...”

ராஜ்குமார் தோளைக் குலுக்கினான்.

“உன் இஷ்டம். நா நாளைக்குக் காலை டூருக்குப் புறப்படறேன்... நாலைஞ்சி நாளாகும் திரும்ப. வந்தா மூட்டை கட்டிகிட்டுப் புறப்படத்தான் டைம் இருக்கும். அப்பவும் நீ யோசிச்சிகிட்டே இருந்தா, நாம நண்பர்களாகத் தான் பிரியணும்.”

பதில் கூறாமல் சுதா ரிக்ஷாவில் ஏறி அமர்ந்தாள்.

“வரேன் ராஜ்... வெள்ளிக்கிழமை பார்க்கலாம்.”

ரிக்ஷா நகர்ந்தது.

தலையைத் திருப்பி, கண்களிலிருந்து ராஜ்குமார் மறையும்வரை பார்த்துக்கொண்டேயிருந்தவளுக்கு, ஒன்றும் தெளிவாக இல்லாத மாதிரி இருக்க, அழவேண்டும்போல இருந்தது.

ராஜ்குமாருக்குச் சென்னையில் வேறு வேலை கிடைத்திருக்கிறது, இந்த வேலையை விட்டுவிட்டு அடுத்த வாரம் புறப்படுகிறான்.

‘நான் போகும்போது என்னோடு வந்துவிடு’ என்று பத்து நாளாய்க் கெஞ்சுகிறான்; ‘ராஜாத்தி மாதிரி வைத்துப் போற்றுகிறேன். உன் அடிமை விலங்குகளை உடைத்துவிட்டு புறப்பட்டு விடு’ என்று விடாமல் எடுத்துரைக்கிறான்.

அப்பாவை விட்டு, அவர் அறியாமல் கிளம்ப வேண்டும் என்பதை நினைக்கையில், பயத்தில் அடிவயிறு முடிச்சு போட்டுக்கொள்கிறது.

ஆனாலும்;

ராஜ்குமார்... அவனோடு சுதந்திரமாக வாழக்கூடிய வாழ்க்கை, இவற்றைக் கற்பனை பண்ணிப்பார்க்கும்போது, கன்னங்கள் சூடேறுகின்றன; மனசு ராகம் எடுத்துப் பாடுகிறது.

என்ன செய்ய வேண்டும்?

சரியான முடிவை எப்போது எடுப்பது?

எது சரியான முடிவு?

யோசனை மாறாமல் சுதா வீட்டுக்கு வந்தபோது, பஜனைக் குழுவினரில் ஒரிருவர் வந்துவிட்டிருந்தனர்.

அடாது மழை பெய்தாலும் விடாது நடத்தப்படும் என்கிற பழமொழி இவர்களுக்கு எத்தனை பொருத்தமானது என்ற எண்ணம் வெறுப்பு கலந்த புன்னகையை உதட்டில் தோற்றுவிக்க, உள்ளே போனாள்.

ஒரு நிமிஷத்தில் மனோகர் அவள் அறைக்குள் வந்தான்.

"ஏன் இவ்வளவு நாழி?"

"........."

"முழிச்சிகிட்டு நிக்காம, முகத்தைக் கழுவி, குத்து விளக்கை ஏத்தி, ஆகவேண்டியதைப் பாரு. உன்னோடு அப்புறமா பேசிக்கிறேன்."

பஜனைக்குத் தேவையானவற்றைக் கவனித்து முடித்த பின், அங்கே கூடத்தில் உட்கார்ந்து அவர்களோடு பாட மனம் இல்லாததால், தன் அறைக்குச் சென்று புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டாள்.

புத்தி பாடத்தில் பதிய மறுத்தது.

**ரா**ஜ்குமார்...

ராஜ்...

முடிவு எடுக்கும் நேரம் நெருங்கிவிட்டதா?

கடவுளே! எனக்குச் சரியான பாதையைக் காட்டேன்...

பென்சிலைக் கடித்தபடி சுதா உட்கார்ந்திருக்க, பஜனை முடிந்து எல்லாரும் வீட்டுக்குப் போனதும், மனோகர் வாசக் கதவைச் சார்த்திக்கொண்டு அவள் முன் வந்து நின்றான்.

"என்னாச்சி உனக்கு இன்னிக்கு?"

குரலில் காணப்பட்ட கோபம், அவளைத் துள்ளிக் கொண்டு எழுந்து நிற்க வைத்தது.

"கேக்கறது காதுல விழலை? என்ன கேடு வந்திச்சி, உனக்கு?"

"ஒ... ஒண்ணுமில்லியேப்பா..."

"பஜனைல ஏன் கலந்துக்கலை?"

"ஒரே தலைவலி... அதான்."

"ஓஹோ! சாயங்காலம் காஜாமலை ரோடுல உன் ரிக்ஷா ஒதுக்குப்புறமா நின்னிட்டிருந்துச்சாமே, அங்க ஏன் போனே? ஒதுக்குப்புறமா என்ன செய்திட்டிருந்தே?"

"அ... அது வந்து.."

"வந்து?"

"கூட்டம் இல்லாம இருக்கும்னு ரங்கசாமி அந்த வழியா வந்தப்ப, செயின் சுழண்டுகிட்டது. அதான் ஓரமா நின்னு.."

வாயில் வந்த பொய்யை, தட்டுத்தடுமாறி சொல்வதற்குள் நெற்றியிலும், மேல்உதட்டிலும் வியர்வைத் துளிகள் பொடிப் பொடியாய் எட்டிப்பார்த்தன.

புடவைத் தலைப்பைப் பிடித்திருந்த விரல்கள் நடுங்கின.

"பக்கத்து வீட்டுத் தறுதலையும் உன் ரிக்ஷாகிட்ட நின்னுட்டிருந்தானாமே? அது ஏன்னு நா தெரிஞ்சிக்கலாமா? எனக்குத் தெரியாம என் பின்னால என்ன நடக்குது? எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். சொல்லு..."

சுதா நிஜமாகவே இப்போது மிரண்டுபோனாள். அப்பாவுக்கு எங்கள் சமாச்சாரம் தெரிந்துவிட்டதா? ஐயோ தெய்வமே!

இனி நான் என்ன செய்வேன்?

"வாயில என்ன கொழுக்கட்டையா? பதில் சொல்றது!"

மனோகர் சிடுசிடுக்க, சுதாவின் கண்களில் நீர் திரண்டது.

"அ.. அது... அவரு... அந்தப் பக்கமா வந்தாராம்... ஏதாச்சும் ஹெல்ப் வேணுமான்னு கேட்டாரு... அவ்வளவுதான்."

பளிச்சென்று மனோகர் கத்தினான்.

"செய்யறதையும் செஞ்சிட்டு, பொய் வேற சொல்றியா? என்னை என்ன ஒண்ணும் தெரியாத இடியட்னு நினைச்சி கிட்டு இருக்கியா? தாறுமாறா ஏதாச்சும் செய்ய நினைச்சே, கொன்னுபோடக்கூட நா தயங்க மாட்டேன்! ஞாபகம் வெச்சிக்க! ஒருதரம் பட்ட அவமானம் போதும்... இன்னொரு தரம் பட விடமாட்டேன். ஒழுங்கா இருக்கறதுனா இரு, இல்லைனா நாளைலேந்து காலேஜுக்கே போக வேணாம்.. புரியுதா?"

கோபத்துடன் விழிகளை உருட்டி கத்திவிட்டு, திரும்பி இரண்டடி வைத்தவன் நின்றான்.

"நாளைக்கு மொத வேலையா, என்ன ஏதுனு விசாரிக்கப்போறேன். அந்த ரங்கசாமிக் கிழவன் வரட்டும்; உண்டு இல்லேனு ஆக்கி, விவரத்தைத் தெரிஞ்சிகிட்டு, அப்புறமா உன்னைக் கவனிக்கிறேன்... அதுவரைக்கும் வீட்டை விட்டு நகரு, சொல்றேன்!"

மனோகர் கூடத்துக்குப் போனதும் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு சுதா சப்தமில்லாமல் சில நிமிஷங்களுக்கு அழுதாள்.

"அப்புறமா அழலாம்... வந்து சோத்த தின்னிட்டுப் போ! சமயல்கார அம்மாளுக்கு வேலையாவது ஆகும்."

வாசப் பக்கத்திலிருந்து மனோகரின் குரல் வர, அவசரமாய் பாத்ரூமுக்குச் சென்று முகம் கழுவி, பொட்டை சீர் பண்ணி, சாப்பிட உட்கார்ந்தாள்.

ஒரு கவளம் உள்ளே முழுசாய் இறங்க விடாமல், பக்கத்தில் அமர்ந்திருந்த மனோகர் மொணமொணவென்று ஏதே திட்டிக்கொண்டேயிருந்தான்.

சாப்பிட்டு முடிந்ததும், "காலைல நா அஞ்சுக்கு எழுந்திரிச்சி வெளியிலே போயிடுவேன்... சங்கரன் வீட்டுலே இருமுடி கட்டறாங்க. சுதா நாளைக்குக் காலேஜுக்குப் போக மாட்டா. ரங்கசாமி வர்றதுக்குள்ளே நா வந்திடறேன். எனக்கு முன்னால அவன் வந்திட்டான்னாக்கூட, அவனண்ட இவ எந்தப் பேச்சும் பேசாம பார்த்துக்கங்க. நா வந்து பாக்கிய பேசிக்கிறேன்..." என்று வேண்டுமென்றே இவளை வைத்துக்

கொண்டு சமையல்கார அம்மாவிடம் சொல்ல, அடங்கி இருந்த சுதாவின் துக்கம் மீண்டும் பீரிட்டது.

சமையல்கார அம்மாவை விட்டு கண்காணிக்கச் சொல்லுமளவுக்கு நிலைமை வளர்ந்துவிட்டதே என்ற உறுத்தல் வேதனையை அதிகமாக்க, தன் அறைக்குச் சென்று, கதவைத் தாழிட்டுக்கொண்டு ரொம்ப நேரத்துக்கு அழுது தீர்த்தாள். இனி நான் என்ன பண்ணுவேன் என்று மாய்ந்து போனாள். அப்புறம் ஒரு நிதானத்துக்கு வந்து, நிறைய யோசனை பண்ணினாள்.

**வி**டியவிடிய சிந்தித்ததில், இனியும் இந்த மனுஷனின் அடக்குமுறையைத் தாங்கிக்கொள்வது இயலாத காரியம் என்கிற கசப்பான உறுதி மட்டும் தனித்து நிற்க, சுதா ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

அப்பா குளித்து வெளியில் புறப்படும்வரை படுத்துக் கிடந்தவள், எழுந்து பெட்டியில் தனக்குத் தேவையான புடவைகளை அடுக்கினாள். சத்தம் செய்யாமல் முன்னறைக்குச் சென்று இரும்பு அலமாரியிலிருந்து தன்னுடைய நகைகளில் ஒரு சிலவற்றையும், பணமாக அதில் இருந்த ஆயிரத்து சில்லறையும் எடுத்துக்கொண்டாள்.

பாத்ரூம் விளக்கைப் போட்டுக்கொண்டு ஒரு பேப்பரில், "அப்பா — நான் போகிறேன்... பதிமூன்று வருஷங்கள் முன் உங்களை விட்டு என்னை ஈன்றவள் ஓடிப்போக, நீங்கள் அவளுக்குக் கொடுத்த அந்த இடம் காரணம் என்று பாட்டி அவ்வப்போது புலம்பக் கேட்டிருக்கிறேன். இன்று நான் உங்களை விட்டு விலகுவதற்கு, என்னிடம் பிரயோகிக்கும் அந்தக் கண்டிப்புதான் காரணம் என்பதை நீங்கள் உணர வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்! எங்கள் இருவர் விஷயத்திலும் நீங்கள் அளித்த அன்பு, கண்டிப்பு ஓவர்டோஸாகிவிட்டது. ஐம் ஸாரி, கோபித்துக் கொள்ளுவதில் பிரயோஜனம் இல்லை. இன்று எனக்குப் பிறந்தநாள்... நான் மேஜராகிவிட்டேன். இனி சட்டம் எனக்குப் பாதுகாப்பு கொடுக்கும். வருகிறேன். சுதா..." என்று எழுதி ஒரு கவரில் போட்டு, பூஜை அலமாரியில் வைத்தாள்.

ஆறுமணிக்குச் சமையல்கார அம்மாள் குளிக்கப் போனதும், பெட்டியும் கையுமாய் வாசலுக்கு வந்து, படிகளில் இறங்கி, பக்கத்து வீட்டை அடைந்து, மாடிப்படி ஏறி, கதவைத் தட்டிய இவளைப் பார்த்து வியப்புடன் கண்களை விரித்து, பிறகு சட்டென்று நிலைமையைப் புரிந்து, முன்னால் சாய்ந்து சந்தோஷத்துடன் ராஜ்குமார் சுதாவை அணைத்துக்கொள்ள—

இதுநாழிகை மப்பும் மந்தாரமுமாய் இருந்த வானத்தின் கிழக்குப் பகுதியைக் கிழித்துக்கொண்டு இளஞ்சிவப்பில் சூரியன் வெளிப்படத் துவங்கினான்.

மின்நூல் கூடம்

DIGITAL LIBRARY

Do you enjoy reading but can't get to your local library?

Then let us bring the library to **YOU**!

மின்நூல் ஆக்கம் : தமிழ் நேசன்